விலை, ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஆனி 31. றம்ழான் 23 இதழ் 152

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 15—7—82

## "துப்பாக்கிச்சூடு விழுந்ததும் ஜீப்புக்குள் படுத்துவிட்டேன்"

### நெல்லியடிசம்பவம்: கான்ஸ்டபிள் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

'துப்பாக்கிச்சூடு எனது கையில் விழுந்ததும் கை விறைத்துவிட்டது நான் பயத்தினால் ஜீப்புக்குள் கண்ணை மூடிக்கொண்டுபடுத்துவிட்டேன். என்ன நடந்ததென்று எனக்குத் தெரியவில்லை.'

இவ்வாறு நெல்லியடியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த பருத்தித்துறைப் பொலிஸ் கான்ஸ்டபிள் சிவராசா, பருத்தித்துறை நீதவான் திரு வி. பி சுந்தரலிங்கம் நேற்றுப் பகல் நடத்திய மரணவிசாரணையின் போது சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஐ. திருச்சிற்றம்பலமும், கான்ஸ்டபிள் சிவராசாவும் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்கள் இச்சம்பவத்தில் நான்கு பொலிசார் மரணமடைந்தது தெரிந்ததே.

இவ்விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது ஆயுதந்தாங்கிய பொலிசார்பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

# யாழ்.நகரை மீண்டும் கலக்கிய 'வெடிகுண்டு' பார்சல் மர்மம்!

## அமைச்சர் சிறில் மத்யூவுக்கு விலாசமிடப்பட்டிருந்தது

(நமது நிருபர் செ. க. சிவதாசன்)

**யாழ்ப்பாண மாவட்டத்தை ஒரு மாத காலத்துக்கு முன்னர் பெரும் பரபரப்புக்குள்ளாக்கிய 'பார்சல் வெடிகுண்டு' மர்மம் நேற்று மீண்டும் தலைதூக்கி; இராணுவத்தினரையும் பொலிசாரையும் உஷார்படுத்தியது!**

யாழ். பஜார் உப தபால் அலுவலகத்துக்கு முன்பாக, தபால் பெட்டிக்கு அருகாமையில் நேற்றுக்காலை ஒரு பார்சல் காணப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது!

'பார்சல்' அங்கு காண பட்டதைத் தொடர்ந்து ஆயுதப் படையினருக்கு இவ் விஷயம் அறிவிக்கப்பட்டது.

### அமைச்சருக்கு முகவரியிட்டு ...

அமைச்சர் சிறில் மத்தியூவிற்கு முகவரியிடப்பட்டு, அனுப்புவர் ஐக்கிய தேசியக் கட்சி யாழ். அமைப்பாளர் என்று குறிப்பிடப்பட்டிருந்த மேற்படி பார்சலினுள் வெடிகுண்டு ஏதேனும் வைக்கப்பட்டிருக்கலாம் எனும் சந்தேகத்தில் பொலிஸார் காவல் நின்றனர்.

இராணுவத்தினர் அழைக்கப்பட்டு உலோகப் பொருட்களைப் பரிசோதிக்கும் கருவியால் பார்சல் சோதனையிடப்பட்டது.

யாழ். பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். தவலிங்கம், உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் திரு. நெவில் பொன்னுன்டோ ஆகியோர் இச் சம்பவம்பற்றி அறிந்ததும் ஸ்தலத்திற்கு விரைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

### பார்சல் சோதனை

இராணுவத்தினர், உலோகப் பொருட்களைப் பரிசோதிக்

[8-ம் பக்கம் பார்க்க]

## வர்த்தக ஊழியர் சங்கத்தின் அடையாள வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

பரந்தன் இரசாயனக்கூட்டுத்தாபனத்தின் பரந்தன் தொழிற்சாலையில் நடைபெறும் வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் 132 கிளைகளும் நேற்று ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்தன.

### கிளிநொச்சியில்

பரந்தன் சந்தியில் சுமார் 150 ஊழியர்கள் ஒரு மணி நேரம் மறியல் போராட்டம் நடத்தினர்.

அரசாங்கக் கூட்டுத்தாபனங்களையும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையையும் சேர்ந்த வர்த்தக ஊழியர் சங்கப்பிரதிநிதிகள் இந்த மறியலில் கலந்துகொண்டனர்.

சுலோக அட்டைகளைத் தாங்கி மறியல்செய்த இவர்களுக்கு ஆதரவாக பரந்தன் சந்தியிலுள்ள வர்த்தக ஸ்தாபனங்கள் கடையடைப்புச் செய்தன.

### பண்டத்தரிப்பில்

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிளையினரும் இவ்வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டனர். சங்கவாசலில் சுலோக அட்டைகளுடன் ஒரு மணி நேர மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர். பரந்தன் வேலை நிறுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்குவழங்கும் பொருட்டு நிதிசேகரிப்பதிலும்

(8-ம் பக்கம் பார்க்க)

## சுவர்ணமுகி இன்று கொழும்பு வருகிறார்

### திங்கள் யாழ். நகரில் நடன நிகழ்ச்சி

[கொழும்பு]

தமிழக ஆஸ்தான நர்த்தகி குமாரி சுவர்ணமுகி இன்று கொழும்பு வருகிறார்.

யாழ் நூலக கட்டிட நிதிக்காக கொழும்பிலும் யாழ்நகரிலும் நடன நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக இங்கு வரும் குமாரி சுவர்ணமுகி கொழும்பிலிருந்து யாழ். வரும் வழியில் வவுனியாவில் நாளை ஆரம்பமாகும் பண்டார வன்னியன் சிலை திறப்பு விழாவிலும் கலந்து கொள்வார்.

யாழ். நூலக நிதிக்காக நாளை வெள்ளிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சியிலும் இம் மாதம் 19ம் திகதி திங்கட்கிழமை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சியிலும் இவர் கலந்துகொள்வார்.

இவரது இலங்கை வருகைக்கான ஏற்பாடுகளை பிரபல வர்த்தகப் பிரமுகர் திரு. வி. ஆர். வடிவேற்கரசன் செய்துள்ளார். [ம-இ]

## நன்றி நவிலல்

பாலசுப்பிரமணியம் - கேதாரகௌரி

23-06-82 அன்று நடைபெற்ற திருமண வைபவத்திலும் தொடர்ந்து 25-06-82-ல் நடைபெற்ற வரவேற்பு உபசாரத்திலும் நேரில் கலந்து வாழ்த்தியும், பரிசில்கள் வழங்கியும், ஆசிச்செய்திகள் அனுப்பியும் எம்மை மகிழ்வித்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி. தனித்தனி நன்றி தெரிவிக்க முடியவில்லை.

மணமக்கள்

சு. நடராசா தம்பதிகள்
'சத்தியஸ்தான்',
மல்லாகம்.

நம. சிவப்பிரகாசம் தம்பதிகள்
'ஞானகிரி'
மல்லாகம்.

(3877)

## கிராமோதய மண்டல நிதியம்: சட்டமூலத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

கிராமிய பொருளாதார. சமூகசேவை கலாச்சாரத்தை அபிவிருத்திசெய்யக் கூடியவிதத்தில் கிராமோதய சபைகளுக்கு உதவி வழங்குவதற்கு கிராமோதய மண்டல நிதியம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

இதுதொடர்பான சட்டமூலத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை பேச்சாளரும் ராஜாங்க அமைச்சருமான திரு ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் பத்திரிகையாளரிடம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது;-

'உத்தேச கிராமோதய மண்டல நிதியத்தின் ஆளுநர் சபையின் தலைவராக கிராமோதய சபைகளுக்குப் பொறுப்பாக இருக்கும் உள்ளூராட்சி அமைச்சர் இருப்பார். 'நிதி, கலாச்சாரம், விவசாயம், கல்வி, சமூகசேவைகள், கிராம அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி ஆகியவற்றுக்குப் பொறுப்பான அமைச்சர்களும் எதிர்க்கட்சித் தலைவர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆகியோரும் மற்றும் இந்நிதியத்தின் தலைவரால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களும் ஆளுநர் சபையில் அங்கம் வகிப்பர்.

''கிராமங்களின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் கிராமோதய சபைகளுக்கு சமூக நலசேவைகள், கலாச்சாரம், சமூக அபிவிருத்தி ஆகியவற்றுக்கு இந்நிதியத்திலிருந்து நிதிஉதவி வழங்கப்படும்.

''கிராமங்களில் மாவட்ட அபிவிருத்திசபை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கும் இந்நிதியிலிருந்து உதவி வழங்

[8ம் பக்கம் பார்க்க]

## 'நியமனங்களை ரத்துச்செய்யும் அதிகாரம் எமக்கு இல்லை!'

### மா. அபி. சபைக் கூட்டத்தில் 'அமிர்'

[யாழ்ப்பாணம்]

''வழங்கப்பட்ட உத்தியோக நியமனங்களை ரத்துச் செய்யும் அதிகாரம் எங்களுக்கில்லை; ஊழல் ஏதும் இருந்தால் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு அறிவித்து அவர்கள் மூலம் எந்தளவுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதைப்பற்றி நாங்கள் ஆலோசனை வழங்கலாம்.''

இவ்வாறு எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் யாழ்,மாவட்ட அபிவிருத்தி சபையின் மாதாந்த பொதுக் கூட்டத்தில், கோப்பாய் எம். பி. திரு மு. ஆலாலசுந்தரம் கொண்டுவந்த தீர்மானம் ஒன்றின்மீது பேசுகையில் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டம் நேற்று அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் யாழ். செயலக மண்டபத்தில் நடைபெற்றபோது உத்தியோகநியமனங்கள் வழங்குவதில் ஊழல்கள் ஏற்படுவது குறித்து நீண்டநேரம் விவாதிக்கப்பட்டது.

''யாழ். பல்கலைக்கழகத்தில் அண்மையில் வழங்கப்பட்ட

[8-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்


### தேவை

சுன்னுகம் மருதனுமடம், கந்தரோடை பகுதிக்குள் வசதியான வீடு ஒன்று வாடகைக்குத் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்க. விளம்பர இல. 3858, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (3858)

எமது ஸ்தாபனத்திற்கு கணக்கியல், ஆங்கில தட்டெழுத்து ஆகியவற்றில் ஓரளவு அனுபவம் வாய்ந்த பெண் ஒருவர் காசாளர்பதவிக்குத் தேவை. உடனடியாக பிரதிசான்றிதழ்களுடன் 20ம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பிக்கவும். உரிமையாளர், GLOBE INDUSTRIES, 163, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 3871

### விற்பனைக்கு

திருக்கேதீஸ்வரம் கோயிலுக்கு அண்மையில் சேத்துக்குளம் என்ற பகுதியில் பத்து ஏக்கரும், கோயிலான் வட்டத்தாழ்வு என்ற இடத்தில் பன்னிரண்டு ஏக்கரும் விற்பனைக்கு இருக்கிறது. உறுதிக்காணி. தண்ணீர் வசதி உண்டு, வாங்க விரும்புவோர் திருக்கேதீஸ்வரம் திருவாசகமடம், சி. சரவணமுத்துவுடன் தொடர்பு கொள்ளவும். 3868

வவனியாவில் ''பண்டாரவன்னியன் பொருட்காட்சி'' சாலையில் அமைந்துள்ள அண்ணு கோப்பி விளம்பர நிலையத்தில் அண்ணு கோப்பியை உடனுக்குடன் அரைத்துப் பெற்றுக்கொள்வதோடு மற்றும் அண்ணு தயாரிப்புப் பொருட்களையும் வாங்கி, நீங்கள் சேகரித்துள்ள வெற்றுப் பக்கட்டுகளை கொடுத்து இனும் பொருட்களை பெற்றுக் கொள்ளுங்கள். அண்ணு தொழிலகம், இணுவில. தொலைபேசி: 7412, 7413. (3859)

### விற்பனைக்கு

மில்க்வைற் மலிவு விற்பனையும் பரிசுகள் வினியோகமும் எங்கே? எப்போது? வவுனியா பண்டாரவன்னியன் விழா பொருட்காட்சி மைதானத்தில் 16, 17, 18-7-82-ந் திகதிகளில் பத்து ரூபாவிற்கு மில்க்வைற் சவர்க்கார இனங்களை வாங்குவோருக்கு பொலித்தீன் பையில் பலவகை அன்பளிப்புகள், கீரை விதைகள் யாவும் மேலதிகமாகக் கிடைக்கும். மில்க்வைற் மேலுறைகளை சேகரித்து வைத்திருப்போர் அவற்றைக் கொடுத்துப் பெறுமதி வாய்ந்த பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற் பிரசாரப் பகுதி. (3819)

### பயிற்சி

Welding, Motor-Mechanism (செய்முறை, அறிமுறை உட்பட) ஆகிய பயிற்சிநெறிகள் மூன்று மாத காலத்தில் மிகவும் குறைந்த கட்டணத்தில் பயிற்சிபெற்ற பொறியியல் நிபுணர்களால் நடாத்தப்படும். புதிய வகுப்பு ஆரம்பம்- 16-07-82. தொடர்புகொள்க: நிர்வாகி, கே. ஜீ'ஸ் இன்ஸ்ரிரியூட். 37 351), மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 3865

### வாடகைக்கு

யாழ்நகரில் இலக்சம் 15/1, பலாலிவீதியிலுள்ள சகல வசதிகளுமுடைய வீடு ரூபா 500/- மாத வாடகையும் ஒரு வருட முற்பணத்துடனும் வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு முகவுரி: சிவசுப்பிரமணியம், 15, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 3842

### சுன்னுகத்தில் வியாபாரஸ்தலம்
## உடன் தேவை

சுன்னுகம் பஸ் நிலையத்திற்கு அல்லது நவீன சந்தைக்கு அருகாமையில் தளத்தில் அல்லது மாடியில் வியாபார ஸ்தலம் ஒன்று குத்தகைக்கோ, விலைக்கோ உடன் தேவை. விபரங்களுக்கு உடன் விண்ணப்பிக்க. விளம்பர இல. 3857, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (3857)

## Wanted: Compositor trainees

Applications are invited by a printing firm in Jaffna from young persons to be trained as Compositors in English and Tamil

1. **Age:** 18 years to 24 years.
2. **Sex:** Both Boys and Girls may apply
3. **Qualifications:** G. C. E. (O/L) with passes in English and Tamil
4. A character certificate from the Grama Sevaka and from two others essential
5. **Training and Employment:** Selected candidates are required to undergo an initial training period for six months, Permanent employment as Compositor apprentices will be offered to successful candidates only after Six months training period.
6. Please send photostat copies of Certificates
7. Applications Close on 20-7-82

Box 200 x
**C% Eelanadu Ltd.**
P. O. Box 49
Jaffna.
3803


# மக்களை பாதிக்கும் நடவடிக்கைகள் அமைதியையும் சட்டத்தையும்நிலைநாட்டாது'

## கிராமசேவையாளார் கூட்டத்தில் க. பொ.

(யாழ்ப்பாணம்)

'வடபகுதியில் பயங்கரவாதச்செயல்களை காவற்படைகளின் பயங்கரவாதச் செயல்களால் அடக்கிவிடலாம் என அரசாங்கம் நினைத்து மீண்டும் செயற்படுவதாகத் தோன்றுகிறது. நான் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தவுடன், நெல்லியடியிலும் யாழ்ப்பாணத்திலும் கடந்த சிலநாட்களாக காவற்படையினர் செய்துவரும் மக்களுக்கு அச்சமூட்டும் செயல்களைப் பற்றிவிபரமாக அறிய முடிந்தது

இவ்வாறு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் யாழ். வை. எம். சி. ஏ மண்டபத்தில் நடைபெற்ற கிராமசேவை அலுவலர் சங்கத்தின் 19வதுஆண்டு கூட்டத்தில் சிறப்புரை நிகழ்த்துகையில் கூறினர்,

அவர் அங் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''பயங்கரவாதச் செயல்களை பயங்கரவாதச் செயல்களால் ஒழிக்கலாமென்று என்னுவது மேலும் பயங்கரவாதச் செயல்களுக்கு தூபமிடுவதாகும்.

''வடபகுதியில் தொடர்ந்து நடைபெறும் பயங்கரவாதச் செயல்களுக்குரிய மூல காரணங்களை அரசாங்கம் நன்கறிந்திருந்தும் அவற்றை நீக்க முயலாமல், மக்கள் எல்லோரையும் பாதிக்கும் செயல்களில் இறங்குவது அமைதியையோ, சட்டத்தையோ நிலைநாட்ட வழிவகுக்காது.

தமிழ் ஈழத்தில் கடமையாற்றும் தமிழ் அரசாங்க ஊழியர் எவருக்கும் சிங்களத்தேர்ச்சியைக் கட்டாயப்படுத்தக்கூடாதென்பதையே வற்புறுத்திவருகிறோம். இந்த அடிப்படை உரிமைபிரச்னையைத் தீர்ப்பதில் பெரும் பொறுப்பு ஒய்வு பெற்று மீளக்கடமையாற்றும் ஒரு சிங்கள அதிகாரியின் கையில் ஒப்படைக்கப்பட்டிருப்பது கவலைக்குரியது. இதனுலேயே இப்பிரச்சனை தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றது'' என்ருர்.

### கத்திமு ை யில் பயமுறுத்தி

# ரூ. 10,000 நகைகள் கொள்ளை! சந்தேகநபர்கள் ரிமாண்டில்!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச்வீதி, கொள்ளைச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் றிமாண்டில் வைக்கப்பட்டார்.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி எம். எஸ். காரியப்பர் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ்வழக்கில் சாவகச்சேரி டச் வீதி இந்துக் கல்லூரி ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி இராசேஸ்வரி பாலசுந்தரம்என்பவரது வீட்டில் முகமூடியணிந்த இருவர் சென்று கத்தியைச் காட்டிப் பயமுறுத்தி அவரையும், அவரது பிள்ளைகளையும் கட்டிலில் எழும்பாமல் படுக்க வைத்துப் பலவந்தமாக அவர்களிடம் திறப்பை வாங்கிஅவர்களது அலுமாரிக்குள் வைத்திருந்த இரண்டரை பவுண் சங்கிலி, மோதிரம், மணிக்கூடு, ஒருஜோடி ஜிப்ஜி, காசு 500 உட்பட 10,150 ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்தாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

கொள்ளைச் சம்பவத்தின் போது ஒருவரது முகமூடிகழன்றதனுல் அவரை அடையாளம் கண்டுகொண்டதாக திருமதி இராஜேஸ்வரி பாலசுந்தரம் அவரது பெயரைப் பொலிசாரிடம் தெரிவித்திருந்தார்.

இதுசம்பந்தமாக சாவகச்சேரிப் பொலிசார் சந்தேகநபர்களான இருவரையும் கைது செய்து மாவட்ட நீதிபதி எம் எச் காரியப்பர் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

நீதிபதி இந்த மாதம் 22-ம் திகதிவரை சந்தேக நபர்களை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார். (க)

### நீதிமன்றம்

## வராதவர் றிமாண்டில்

[சாவகச்சேரி]

வாகனத்தைக் கவலையீனமாக ஓட்டி விபத்தைத் தடுக்கத் தவறியதாகச் சாவகச்சேரிப் பொலிசாரால்குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சு. தனபாலசிங்கம் என்பவர் குறித்த தவணையில் கோட்டுக்குச் சமுகமளிக்தவறியதற்காக இம் மாதம் 22ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும் படி நீதிபதி எம் எச். காரியப்பர் உத்தரவிட்டுள்ளார் [க]

சாவகச்சேரி

## ப. நோ. கூ. ச. கூட்டுறவு தின விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இவ்வாண்டிற்கான சர்வதேச கூட்டுறவுத் தினவிழாவை இம்மாதம் 31ம் தேதி கொண்டாடவிருக்கிறது.

இவ்விழாவினை யொட்டிச் சாவகச்சேரித் தொகுதி பாடசாலை மாணவ, மாணவியரிடையேபேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, சங்கீதப் போட்டி என்பனவும் சங்க அங்கத்தவகர்களிடையே ஆண், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி, கயிறு இழுத்தல் போட்டி ஆகியவையும் நடைபெறவிருக்கிறது.

இதன் பிரதம விருந்தினராக கூட்டுறவு சிரேஷ்ட ஆணையாளர் திரு. எஸ். ஜெயகாந்தனும், சிறப்பு விருந்தினராகச் சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம், கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. வே நடராசா, ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச்சபைத்தலைவர் திரு. மு. ஆலாலசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்வார் ள். (க)


யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)

## கேள்வி கோரல்

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 8250 சதுர அடி கொண்ட இரண்டாம் மாடிக் கட்டிடத்தை விடுதிச்சாலை (Hotel) அமைப்பதற்கு வாடகைக்கு விட தீர்மானித்துள்ளது.

20 இரட்டைப்படுக்கையறை, 15 ஒற்றைப்படுக்கையறை உணவருந்தும் மண்டபம், சமையற்கூடம் கொண்ட நவீனவிடுதிச்சாலை (Hotel) நடாத்த போதுமானது.

**விண்ணப்ப முடிவு திகதி: 31-7-82**

விண்ணப்பப் படிவங்களையும், விண்ணப்ப நிபந்தனைகளையும் மீளளிக்கப்படாத கட்டுப்பணமாக ரூபா 100/-ம் மீளளிக்கக்கூடிய கட்டுப்பணமாக ரூபா 1000/-மும் கட்டி பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்.
74/3, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம். (3860)

## போர்மன் தேவை

**தகைமை**

க பொ. த (சாதாரணதரம்)சித்தியுடன்10வருட அனுபவமும் அல்லது J. T. O. 5வருட அனுபவத்துடன்

**அனுபவம்:**

இயந்திர சாதனங்கள் திருத்தும் நிலையத்தை நடாத்தக்கூடியவராகவும், லேத்மெஷின்களை இயக்குவதிலும் வெல்டிங் மற்றும் இயந்திரத் தொழிற்சாலை அடிப்படை அனுபவமும் உடையவராகவும் இருத்தல் வேண்டும். மின்சார இயந்திர அனுபவம் இருப்பின் விரும்பப்படும்.

**சம்பளம்:**

நேரில் தீர்மானிக்கப்படும்.

20-07-82க்கு முன் விண்ணப்பிக்கவும்

பதிவாளர்,
**பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்,**
59, சென் பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாண்ம்.
(3870)

# பிரதமர் பெகினுக்கு வழங்கப்பட்ட நோபல் பரிசு

# வாபஸ்பெறப்படவேண்டுமாம்

## பாகிஸ்தான் அறிஞர்கள் 'போர்க்கோலம்'

ரெல்அவீவ், ஜூலை 14

1978ம் ஆண்டு இஸ்ரேலியப் பிரதமர் திரு. மெனச்சம் பெகினுக்கு வழங்கப்பட்ட சமாதானத்துக்கான நோபல் பரிசை வாபஸ்செய்யுமாறு பாகிஸ்தானைச்சேர்ந்த பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோர் சுவீடனிலுள்ள நோபல்பரிசு நிறுவனத்தைக் கேட்டுள்ளன.

இஸ்ரேலியத் துருப்புக்களால் ஆயிரக்கணக்கானவர்கள் தென்லெபனுனில் பலியாகிவருகின்றனர் என்றும், இக் கொலைகளுக்குப் பொறுப்பாகவிருக்கும் இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகினின் சமாதானத்துக்கான நோபல் பரிசுவாபஸ்பெறப்படவேண்டுமெனவும் பாகிஸ்தான் அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

1977ம் ஆண்டுக்கு முன்னர் இரு துருவங்களாகவிருந்த எகிப்தும் இஸ்ரேலும் தமக்கிடையே செய்துகொண்ட சமாதான ஒப்பந்தத்தையடுத்தே முன்னுள் எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர்சதாத்திற்கும், இஸ்ரேலியப்பிரதமர் திரு. மெனச்சம் பெகினுக்கும் கூட்டாக 'நோபல்' சமாதானப் பரிசை சுவீடன்வழங்கியிருந்தது.

### 6வது போர்நிறுத்தமும் தளர்வு

இது இவ்வாறிருக்க கடந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து அமுலுக்கு வந்த ஆருவது போர்நிறுத்த ஒப்பந்தமும் தளர்வடைந்துவிட்டது.

நேற்றுமுன்தினம், பெய்ரூட்டின் தென்கிழக்குப் பகுதியில் நிலைகொண்டிருந்த இஸ்ரேலியத் துருப்புக்கள் மீது பாலஸ்தீன கொரில்லாக்கள் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலொன்றே இத் தளர்விற்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டது.

### ஏற்க மறுப்பு

அமெரிக்க அதிபரின் விசேட பிரதிநிதியான திரு பிலிப் ஹபிப் பாலஸ்தீன—இஸ்ரேலிய போர்நிறுத்த நடவடிக்கைகளுக்காகத்தொடர்ந்தும் செயலாற்றி வருகின்றுர் இவரிடம் பாலஸ்தீன இயக்கத்தினர் தாம் பெய்ருட்டில இருந்து வெளியேறுவது குறித்து தெரிவித்த நிபந்தனைகளை இவர் இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகினிடம் தெரிவித்தார். ஆனல் இஸ்ரேல் அரசாங்கம் அந்த நிபந்தனைகளை ஏற்க பூரணமாக மறுத்துள்ளது. பாலஸ்தீனர்கள் வெகு விரைவில் பெய்ருட்டில் இருந்தும் வெளியேறவேண்டுமென்பதனையே மீண்டும் அது வலியுறுத்தியுள்ளது.

### புதிய ராஜாங்க அமைச்சர் கருத்து

ஜெனரல் அலெக்ஸாண்டர் ஹெய்க் வெளிவிவகாரஅமைச்சர் பதவிலிருந்தும் ராஜினமா செய்ததையடுத்த புதியவெளிவிவகாரஅமைச்சராகப் பதவியேற்கவுள்ள திரு. ஜோர்ஜ் ஷுல்,பாலஸ்தீனர்களின் கோரிக்கைகள் பூரணமாசத் தீர்க்கப்படும் பட்சத்திலேயே மேற்காசியாவில் பூரண அமைதி ஏற்படும் என்று தெரிவித்ளார்.

மோதலில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரையும் வீண் இரத்தக்களரிக்கு இடமளிக்காது சமாதானப்பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுமாறும் அவர் கோரியுள்ளார்.

### றிசேர்வ் அணியின் கோரிக்கை

தென்லெபனுனிலிருந்து பாலஸ்தீனர்களை அகற்றும் முயற்சியில் இஸ்ரேல் இராணுவம் இறங்கியுள்ள அதே சமயம் இஸ்ரேல் நாட்டில் இம்முயற்சியைமுடிவுக்கு கொண்டு வருமாறு தொடர்ந்தும் கோரிக்கைகள் எழுந்த வண்ணமிருக்கின்றன. இஸ்ரேலின் றிசேவ் இராணுவ சேவையைச் சேர்ந்தநூற்றி இருபத்திரெண்டுவீரர்கள் போரை நிறுத்தக் கோரும் மகஜரொன்றை பிரதமர் பெகினுக்கு அனுப்பி வைத்துள்ளனர். இவ் அணியின் தலைவர் தமது மகஜ பற்றித் தெரிவிக்கையில் வீண் இரத்தக்களரியைத் தவிர்த்து அமைதியாகத் தீர்வு காண்பதையே தாம் விரும்புவதாகத் தெரிவித்தார்.

### நிக்கோஸியாவில் சந்திப்பு

தென் லெபனுன் பிரச்னைக்குத் தீர்வுகாணும் விதத்தில் கூட்டுச்சேரா நாடுகளின் அங்கத்தவர்க சைப்பிரசிலுள்ள நிக்கோஸியா நகரில் கூடவுள்ளனர் இந்திய வெளிவிவகார அமைச்சர்திரு நரசிம்மராவோ நேற்றைய தினம் புதுடில்லியிலிருந்தும் நிக்கோஸியா பயணமாளு. மகாநாட்டில் நல்ல முடிவு எடுக்கப்படுமென்றே தாம் எதிர்பார்ப்பதாக அவர் தம்மை விமான நிலையத்தில் சந்தித்த பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். [கி]

## இந்திராவின் அமெரிக்க விஜயம்

புதுடில்லி, ஜூலை; 14

இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி பத்து நாள் விஜயத்தை மேற்கொண்டு இம்மாதம் 27ம் திகதி அமெரிக்காவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர் தனது விஜயத்தின் போது ஐ நா பொதுச்செயலாளரை சந்தித்து உரையாடுவாரென்றும் தெரிவிக்கப்பட்டது.

வாஷிங்டனில் இவர் அமெரிக்க ஜனதிபதி திரு ரெஞல்ட் றீகனையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகக் கூறப்பட்டது.

திருமதி இந்திராகாந்தி இவ் விஜயத்தின் போது உலகவங்கி தலைவரையும் சந்தித்து, உரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [வெ]

## அமரர் காமராஜர் பிறந்த தினம்

(சென்னை)

கர்ம வீரர் காமராஜரின் 80 வது பிறந்ததினம் இன்று சென்னையில் கொண்டாடப் படவிருக்கின்றது.

இன்று காலை சென்னை கலைவாணர் அரங்கில் காமராஜரின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் புகைப்படக் காட்சியொன்றை தமிழக மாநில ஆளுநர் ஜனுப்.சாதிக்அலி அங்குரார்ப்பணம் செய்து வைப்பார். மாலை தமிழக முதல்வர். திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அமரர் திரு. காமராஜரின் உருவப் படத்தை திரை நீக்கஞ்செய்து வைத்து சொற்பொழிவாற்றுவார். [கி]

# "சேபால மீது இனி எனக்கு கொஞ்சமும் அன்பு இல்லை"

## விமானக்கடத்தல் காரரின் மனைவி தாயகம் திரும்புமுன் கூறியது

[கொழும்பு]

சேபால நினைத்திருந்தால் நேர்மையான வாழ்க்கை நடத்தியிருக்கலாம். ஆனல் அவர் தமக்கிருந்த வாய்ப்புக்களை கோட்டைவிட்டுவிட்டார். அவரால்நான் மிகவும்கஷ்டப்பட்டு விட்டேன். இனியும் அவருக்காக என் நெஞ்சில் அன்பு இல்லை. அவர் நெஞ்சிலும் எமது அன்பு நிலவும் என்று நான் நம்பவில்லை"

இத்தாலிய விமானத்தைக் கடத்திய இலங்கையரான சேபால எக்கநாயக்காவின் இத்தாலிய மனைவி அன்னு ஆல்ட்ரேவான்டி இவ்வாறு கூறியிருக்கிருர். தமது 4 வயது குழந்தை 'ஃபிறீ'யுடன் தாயகம் புறப்படுவதற்குமுன் இக் கருத்தை பத்திரிகையாளர்களிடம் இவர் தெரிவித்தார்.

"நானும் என் பிள்ளையும் இங்கு பெரும் திகிலுடன்தான் இருந்தோம். மீண்டும் நான் இலங்கைக்கு வரவேண்டி ஒரு போதும் ஏற்படாது கடந்த சில நாட்களாக இலங்கையில் பெரும் துன்பத்துடனேயே இருந்தேன். எனக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்களை என்னுல் மறந்துவிட முடியுமா என்று தெரியவில்லை" என்று திருமதி ஆல்ட்ரேவான்டி கூறினுர்.

கடந்த வெள்ளியன்று இலங்கையிலிருந்து தமது குழந்தையுடன் அன்னு ஆல்ட்ரேவான்டி விமானத்தில் புறப்பட்டுச் சென்றுர். சில மணித்தியாலயங்களின் பின்னர் அவர் குழந்தையை இலங்கையிலிருந்து எடுத்துச்செல்வதைத் தடைசெய்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பொன்றைவழங்கியது தீர்ப்பு வரும் முன்னரே அவர் கராச்சிக்கு விமானத்தில் சென்றுவிட்டார்.

"இங்கு நான் இருப்பது மிக அவசியம் என்று அரசாங்க அதிகாரிகள் கருதினுல் மாத்திரமே நான் திரும்பிவர நேரிடும். அவ்வாறு நான் நினைக்வில்லை. இங்கிருப்பதனு எனக்கு துச்ககரமான பழைய நினைவுகளே வந்துகொண்டிருக்கும்" என்றுர் அன்னு.

அவர் மேலும் தெரிவித்ததாவது: எனது திருமணம் முடிந்துபோனகதை இந்தவிமானக்கடத்தல் நாடகத்தினு அல்லஅது ஏற்கனவே பாறையில் மோதிவிட்டது. சேபாலவை நான் தொடர்ந்தும் விரும்பவில்லை. ஒரு சிறிதாகிலும் அன்பு எஞ்சிஇருந்தாலும் இந்த விமானக்கடத்தலால் அதுவும் போய்விட்டது.

சேபாலவின் பால்யப்பருவம் மிகவும் துன்பகரமாக இருந்துள்ளது. அவருக்கு பெற்ருேரின் அன்பு கிடைக்கவில்லை. 12 வயதிலிருந்தே வீடில்லாமல் அலைந்திருக்கிருர். கடினமான வாழ்க்கை வாழ்ந்திருக்கிருர். இருந்தாலும் அவர் முயன்றிருந்தால் நல்ல வாழ்க்கையை இத்தாலியிலோ இலங்கையிலோ அமைத்துக் கொண்டிருக்கலாம் என்றே நான் கருதுகிறேன்.

நான் மீண்டும் எனது நாட்டுக்குத்திரும்பிச் செல்கிறேன். எதிர்காலம் குறித்து திட்டம் எதுவுமில்லை. கடந்தபல ஆண்டுகளில் இருந்ததுபோலவே சாதாரண வாழ்க்கையில் மீண்டும் ஈடுபடுவேன். ஃபிறியை நான் பாதுகாத்துக் கொள்வேன் எனது ஆசிரிய தொழிலிலேயே ஈடுபடுவேன். அதுவே நானும் என் குழந்தையும் வாழ்வதற்கான வழி. நான் தொடர்ந்து ஆசிரியத் தொழிலைச் செய்வேன். அதனுல்தான் நானும்வாழலாம் குழந்தைக்காண உணவையும் தேடலாம்.

சமீப காலத்தில் எனக்கும் என் பிள்ளைக்கும் ஏற்பட்டுவிட்ட துன்பகரமான அனுபவங்களினுல் என் குழந்தைக்கு உளரீதியில் பாதிப்புக்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதே எனது இப்போதைய கவலை. ஃபிறீ சிறு குழந்தையல்ல. அவனுக்கு நாலு வயதாகின்றது. இந்த மூர்க்கமான அதிர்ச்சிகள் அவனைப் பாதித்திருக்கமுடியும்

அவனுக்கு விளங்குகின்றது. பல நாட்களாக பல மணி நேரம் விமானப் பயணம் செய்துள்ளான். இங்கும் அங்கும் நாங்கள் பிரயாணம் செய்தது ஏதோ உல்லாசத்துக்காக வல்ல என்பது அவனுக்கு புரிந்திருக்கும், கேட்டறியாத மொழிகள் பேசும் பல்வேறுபட்ட மக்கள் மத்தியில் விசித்திரமான இடங்களில் எல்லாம் நாங்கள் இருந்துள்ளோம். தன் தகப்பனுரை ஜெயிலில் பார்த்திருக்கிருன். இவை அனைத்தும் வளர்ந்த மனிதர்களைக்கூட மனக்குழப்பமடையச் செய்வதற்குப் போதுமானவை.

ஃபிறீ அவன் வயதுடைய எல்லா பிள்ளைகளையும்

(7-ம் பக்கம் பார்க்க)

# "இலட்சியத்தில் வெற்றிபெற வாழ்வைக் காட்டிலும் சாவையே பாலஸ்தீன மக்கள் விரும்புகிருர்கள்"

### -- பாகிஸ்தான் கவிஞர்

இஸ்லாமாபாத். ஜூலை, 14

"ஜூன் மாதம் 24ம் திகதி வரை நான் பெய்ருத்தில் இருந்தேன். அந்த நகர் குண்டுகளால் எவ்வாறு தாக்கப்பட்டது என்பதை நான் எனது கண்களால் பார்த்தேன். தீயை அணைக்கவோ அன்றி இடிபாடுகளிலிருந்து காயப்பட்டவர்களைக்காப்பாற்றவோ பெய்ருத் மக்களுக்கு அவகாசமே இல்லை. பலலாயிரக்கணக்கானவர்கள் வீடுவாசல்களை இழந்துள்ளனர் காயப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்க நகர வைத்திய சாலையில் இடமே இல்லை இத்தகைய காட்டுமிராண்டித்தனத்தை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன்"

இவ்வாறு பிரபல பாக்கிஸ்தானிய கவிஞரான இ அஹ்த் பாயிஸ் குறிப்பிட்டார்.

பெய்ருத் நகரை இஸ்ரேலியத் துருப்புகள் தாக்கியபோது அங்கிருந்துதப்பிவந்த இவரை பத்திரிகை நிருபர்கள் பேட்டி கண்டபொழுதே இவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

"பயங்கரவாதம்தான் இஸ்ரேலிய ஆட்சியாளர்களது அபிமான அரசியல் கருவி. ஆனுல் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை பயங்கரவாதிகள் என்று இஸ்ரேல் குறிப்பிடுகிறது. ஆனுல் பி. எல். ஒவும் பாலஸ்தீன மக்களனைவரும் தான், இஸ்ரேல் ஸ்தாபிககபட்ட காலம்முதல் பயங்கரவாதத்திற்குப்பலியாகி வருபவர்கள்.

',இஸ்ரேல். 100, 000 எண்ணிக்கை கொண்ட ராணுவத்துடனும், கடற்படை, விமானப்படை, டாங்கிகளுடனும் இப்படையெடுப்பை நடத்தியுள்ளது. ஆனுல் பாலஸ்தீன மக்கள் இறுதிவரை போராடுவர். வாழ்வைக்காட்டிலும் சாவையே அனேகர் விரும்புகின்றனர். எத்தனைபலமிருந்த ராணுவத்தைக் கொண்டிருந்த போதிலும் இஸ்ரேல் வெற்றியடையப்போவதில்லை. ஆக்கிரமிப்பும் பயங்கரவாதமும் வெற்றியடைந்ததாக வரலாறு இல்லை. எந்தக் குற்றமும் தண்டிக்கப்படாது விட்டது கிடையாது" என்றும் உணர்ச்சி பொங்கக்கூறினுர். பாக்கிஸ்தானியக் கவிஞர்.

### மணிவாக்கு

சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பதே தலை

— குறள்

## நமது நோக்கு

# மூன்று வருடத்திலிருந்து மூன்று வாரம்?

ஜனாதிபதி தேர்தலே இன்று எங்கும் அடிபடும் விடயம்.

உரிய நேரத்தில் தேர்தல் நடைபெறுமென்று ஜனாதிபதி ஜெயவர்த்தன அடிக்கடி நினைவுறுத்தி வந்தார். அதில் சிலேடை உண்டா என்று சந்தேகித்தவர்களுக்கு 1983ல் பொதுத்தேர்தல், 1984ல் ஜனாதிபதிதேர்தல் நடைபெறும் என்றும் அதற்கு முன் நடைபெற வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்று அவர் தெளிவுபடுத்தி வந்தது மக்கள் அறிந்ததே

இன்று வெளிவரும் செய்தி சடுதிமாற்றத்தைக் குறிக்கின்றது. இவ்வருடத்திலேயே ஜனாதிபதிதேர்தல் நடைபெறுமென்றுபொறுப்புள்ள வட்டாரங்கள் வெளியிடத் தொடங்கிவிட்டன. அதுமட்டுமல்ல, தேர்தல் நடத்த ஜனாதிபதி முடிவுசெய்தபின் மூன்று வாரங்களுக்குள் அந்ததேர்தலை நடத்தி முடிக்க அரசமைப்புக்கான புதிய திருத்தங்கள் ஆயத்தமாகின என்றும் சொல்லப்படுகிறது.

இவ்வித திடீர் மாற்றங்கள் குறிக்கும் செய்திகள் சிலவேளைகளில் ஆலோசனைகளாகவும் இருக்கலாம். இருப்பினும் இவை மின்னல் வேகத்தில் நடந்து முடிவதை நாம் அனுபவத்தில் கண்டுள்ளோம்.

1984 எவ்வளவு தூரத்தில் இருக்கிறது? இன்று ஜனாதிபதி தேர்தலை நடத்த முடிவு செய்தால் மூன்று வாரங்களில் நாட்டின் இரண்டாவது நிர்வாக ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டு விடுவார். இவ்வித திடீர் தேர்தல் நடந்தேற முடியுமென்பது தெளிவாகிறது.

அமரர் பண்டாரநாயக்காவின் 'சிங்களம் மட்டும்' சட்டம் 24 மணித்தியாலங்களில் அமுலாக்கப்படும் என்ற கோஷம் போல் தொனிக்கின்றது. அச்சட்டம் நிறைவேற்றப்பட்டபோதும் 24 மணித்தியாலங்களில் அது அமுலாக்கப்படவில்லை. 24 வருடங்கள் முடிவடைந்தும் அது [illegible]ல இடர்களுக்குள்ளாகி இருப்பதை நாம் காண்கின்றோம்.

ஜனாதிபதி தேர்தல் புதிய அரசியலமைப்பில் மிகப் பொறுப்பு வாய்ந்த, அதிகாரம் நிறைந்த பதவி. அது ஒரு அரச பதவிக்கு சமமானது. நாட்டின் முதல வது ஜனாதிபதியை மக்கள் நேரில் தேர்ந்தெடுக்கவாய்ப்பிருக்கவில்லை; நிர்வாக ஜனாதிபதி ஆட்சி இந்த நாட்டுக்கு உகந்ததா என்று மக்கள் நேரடித்தீர்ப்பு வழங்குவதானால் பொதுத் தேர்தலே முன்செய்த ஒழுங்கின்படி, முன்னே நடக்கவேண்டியது.

திடீர் மாற்றம், மூன்று வார அவகாசம், இவையெல்லாம் ஏதோ ஒரு [illegible] தூரமான காரணம் பற்றியென்பது [illegible].

அரசு இது தான் வாய்ப்பான தருணம் என்று கருதுகிறதென்பது தெளிவான கருத்து.

பொறுப்பான அமைச்சர் ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிராதுஎன்று சவால் விட்டிருப்பது, இன்றைய ஜனாதிபதிக்கு ஆதரவு தேடும் மனோதத்துவ முறையா? அல்லது போட்டியில்லாத் தேர்தலில் மோகம் கொண்டிருப்பதை வெளிப்படுத்தும் கருத்தா?

ஜனநாயக ஆட்சியில் இந்தநாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் அதிகாரம் [illegible]ற்ற ஒருவரை போட்டியின்றித் தெரிவதானால் மக்கள் அனைவரும் ஒருமைப்பட்டு விரும்பிய ஒருவரே அதற்கு அருகதையானவர்,

உயிர்த்துடிப்புள்ள மக்கள் ஆட்சியில் இந்த நிலை சாத்தியமாவதில்லை எந்த 'முடிசூடா மன்னனுக்கும்' போட்டியிருக்க வேண்டும். அந்த முறையை நாம் மனமார ஆதரிக்கின்றோம்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி பலம்பெற்றிருப்பது எவ்வளவு அவசியமோ, ஜனாதிபதி தேர்தலிலும் வெல்லும் வேட்பாளருக்குப் போட்டியிருக்க வேண்டியது அவ்வளவு அவசியம்.

அதற்குரிய வழியை எதிர்க்கட்சிகள் தேடுவது நியாயமாகும்; அவசியமும் கூட.

## மகாராணியின் மனநிறை

பிரிட்டிஷ் மக்கள் இன்றும் அரசரை மதிக்கும் பண்பு தனிச்சிறப்புடையது.

அரசருக்கோ அல்லது மகாராணிக்கோ ஒரு சிறு சுகவீனமென்று அறிந்தால், மழைக்குளிருக்குள்கடைசிச் செய்தி அறிய மாளிகைக்கு முன் ஆவலுடன் காத்திருக்கும் பிரிட்டிஷ்மக்கள் கூட்டம் இதற்குச்சான்றாகும்.

இந்தக் கோட்டைக்குள் ஒருவர் அதுவும் இராநேரத்தில், மகாராணியின் படுக்கை அறைக்குள் புகுந்தது மட்டுமல்லாமல் கட்டிலில் அமர்ந்தாரென்றால் அது நம்புதற்குரிய சம்பவமா?

இருந்தும் இந்த 'ஆசாமியை' எவ்வித ஆபத்துமின்றி கைப்பற்ற உதவிய மகாராணியின் மனநிறை எத்தகையது? எவ்வித பரபரப்புமின்றி அந்தரங்க உறுதிகொண்ட உத்தமி, பிரிட்டிஷ் பெண்மணிகளுக்கு மட்டுமல்ல பெண்குலத்துக்கே ஒரு தனிப்பட்ட முன்மாதிரியான சாதனையை இயற்றிவிட்டார்.

பெண்ணாகப் பிறந்தவளுக்கு உறுதியானதுணையும் காப்பும் அவளுடைய மனநிறை ஒன்றே. வெளிப்பாதுகாப்பு எவ்வளவு அவசியமானாலும், அதல் பயனில்லை; அந்தராத்மாவின் காப்பே காப்பு என்ற தமிழ் மக்களின் பாரம்பரியகோட்பாட்டுக்கு ஒன்றுஎலிசபெத் மகாராணி உதாரணமாக விளங்குகிறார்.

# நல்லதோர் சமூகத்தை உருவாக்குவோம்

பொது நிலையங்களில் ஒருநிகழ்ச்சி நடைபெற்றால் அதில் குறைகாண்பதே குறிக்கோளாகப் பலர் உளர். நடைபெறும் நிகழ்ச்சிக்கு தம்மாலியன்ற ஒத்தாசை செய்ய [illegible] பவரும் எண்ணியதை நடைமுறைப் படுத்துவரும் அரிதாகவே உள்ளது. ஆனால் ஒரு செயலை இவ்வாறிவ்வாறு செய்தலால் பல வகையான றப்புக்கள் உண்டாகும் என்று மட்டும் ஆலோசனை வழங்கவல்லவர் பலர். இவர்களைப் போன்றோர்களை பாரதி கண்டதாலேயே ",நெஞ்சிலுரமுமின்றி நேர்மைத்திறமுமின்றி எழும்நடிப்பச்சுதேசிகளுக்காகவென 18 பாடல்கள் பாடிவைத்தார்.

நாலுபேர் கூடி நின்று கதைக்கும் போது தொடர்பற்றவராய் அக்கதையைக் கேட்கும் சந்தர்ப்பமுள்ளவர்கள் மனட்புண்படக்கூடியதாய் கதைப்பர் - சனமூகத்தில் உரையாற்றும் போது சுதந்திரத்தின் பெருமை வீரத்தின் சிறப்பு அன்பின் ஆற்றல் முதலியன பற்றியும் நம்மிடையே அருகியுள்ள ஒற்றுமை, உதவி இரக்கம், பணிவு, இன்சொல் நிதானம் முதலிய பண்புகளில் எவருக்கும் ஆர்வம் உண்டாகும்படியும் முழங்குபவர்செயல் முறையில் அநாகரிகம் வஞ்சனை ஹிம்சைமுதலாயகுணத்துடன் வாழ்வர் இவர்களை பாரதி பாடும் போது "கூட்டத்தில் கூடிநின்று கூடிப்பிதற்றலின்றி நாட்டத்தில் கொள்ளாரடி கிளியே - நாளில் மறப்பாரடி என்று பாடினர்.

வயது முதிர்ந்தவர்கள்- தாய்மார் நோயாளிகள் முத

தி. பொன்னம்பலவாணர்

லியவர் பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போது ஏனையோர் அவர்கட்கு உதவுவது அழகு. பண்புடையோராய் இருக்க விரும்புவர் உதவுவதுஅவசியம் கூட. நீண்டதூரம் நின்று பிரயாணம் செய்தவரும் நீண்ட தூரம் பிரயாணம் செய்ய வேண்டியவரும் தம் மிடத்தை பிறருக்கு உதவ அஞ்சுவது இயல்பே. ஆனால் நின்று பிரயாணம் செய்ய விரும்டம் சிறுவர்களை உதவி செய்யும்படி தூண்டுவதற்குப் பதிலா தம்மோடு வலிந்து இருக்கச் செய்தும் இரக்கப் படவேண்டியவர்கள் பிரயாணம் செய்வதை வெறுத்தும் இகழ்ந்தும் அபிப்பிராயப்படுவதும் என்பன தினமும் பிரயாணம் செய்பவர் காண வேண்டிய கஷ்டங்களாக உள்ளன. இப்படியான கஷ்டத்தை உண்டாக்குபவர் தாம் உதவி செய்யப்படும் நிலைக்குவரின் என்ன அவதிப்படுவர் என்பதை எண்ணுறுவதில்லை. தமக்கு பிரயாணகாலத்தில் உதவியும் தேவைப்படின் தம்மோடு நிற்பவருடன் கதைக்கும் வாய்ப்பும் உண்டானல் உதவிசெய்வதன் அவசியத்தை வலியுறுத்தவே செய்வர் இப்படியான நடிகர்களையே "சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காரடி" என்று பாடியுள்ளார்.

இப்படியான குறைபாடுகள் இன்று நம் சமூகத்தில் பலரிடம் வெளிப்படையாகவும் பலரிடம் இலைமறைகாயாகவும் காணப்படுகின்றது. இக் குறைபாடுடையவர்களை அழிப்பதும் அவமானப்படுத்துவதும் களை எடுப்பதாய் அமையாது பயிரையே அழிப்பதாகிவிடும்.

நாம் நம்சமூகத்தை நாகரீகமுள்ள பண்பாடு முதலியன உடைய இனிய சமூகமாகச் செப்பனிட வேண்டுமாயின் நல்ல உபாயம் உண்டு. பொறுமையும் அன்பும் உடையவர்களாய் இன்னாத சொல்கூறுது. இனிய சொல்லே கூறும் சமூகச் சிற்பிகளாக நாம் மாற வேண்டும், பாரதியார் சக்தியைநோக்கி "வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே" என்று கேட்டது போல செயற்பட வேண்டும்.

## மக்கள் கருத்து

### தர்மம் ஒருநாள் வெல்லும்

இலங்கையில் சிங்களநாடு [illegible] நடு [illegible] அன்னிய ஆட்சியின்கீழ் அடிமைப்படுத்தப் [illegible] மையும், அன்னிய ஆட்சிநீங்கி [illegible] சிங்களமக்களின் கையில் ஆட்சி அதிகாரங்கள் முழுவதும் போய்ச் சேர்ந்ததும் அதனால் தமிழினத்தின் மொழியுரிமை, அரசியல் உரிமை, குடியுரிமை யாவும் பெரிதும் பாதிப்படைந்து அடிமை இனமாக காலத்துக்காலம் ஏமாற்றப்பட்டுவந்தமையும்' தமிழ்ப் பேசும்மக்கள் த. வி.கூட்டணியில் ஒன்றிணைந்து தமிழ் ஈழமே எமக்கு விமோசனம் அளிக்கும் என இறுதிமுடி எடுத்தமையும் உலகம் அறிந் உண்மைகளாகும்.

தமிழ் ஈழத்தைப் பெறுவது எப்படி என்றும் தீர்க்கமாக தீர்மானிக்கப்பட்டது. போராட்டம் இல்லாமல் எந்த ஒரு நாடும் சுதந்திரம் பெற்றதில்லை. ஆனால் எந்த வழிப் போராட்டத்தை நாம் மேற்கொள்ளவேண்டும் என்பதை பலமுனைகளிலும் நன்கு ஆராய்ந்து அகிம்சை வழிப் போராட்டமே எமக்கு உகந்தது, நன்மை பயக்கவல்லது என்று தீர்மானிக்கப்பட்டது. சத்தியாக்கிரகம்-கர்த்தால் -உண்ணாவிரதம்- சட்டமறுப்பு- ஒத்துழை

(5ம் பக்கம் பார்க்க)

# வண்ணை தேவி உற்சவம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,

வண்ணார்பண்ணை ஸ்ரீமத் வலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான தேவி மகோற்சவம் இன்று வியாழக்கிழமை பகல் 11-30 மணிக்கு ஆரம்பமாகின்றது. 12-0 மணிக்குக் கொடியேற்றம் நிகழும்.

பதினொரு நாட்கள் நடைபெறும் இவ்வுற்சவத்தில் இம்மாதம் 19-ம் திகதி திங்கள் இரவு சப்பரத்திருவிழாவும், 23ம் திகதி வெள்ளியன்று காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் நிகழும். திருவிழாக் காலங்களில் தினமும் பகல் 9மணிக்கும் மாலை 6-30மணிக்கும் வசந்த மண்டப பூஜையும், மாலை 5-30 முதல் 6-30 வரை தேவஸ்தான வித்துவான் திருப்பூங்குடி வி. வி.கே. ஆறுமுகத்தின் "அருஞ்செயல் புரிந்த அருட்செல்வியர்" என்னும் பொருள்பற்றிக் கதாப் பிரசங்கமும் இடம்பெறும்.

(ப)

ஈழத்து கவிஞர்களுக்கு

## இன்னொரு சந்தர்ப்பம்

'பேனா'

அண்மையில் வெளியான உலகின் 15 நாடுகளில் வாழும் கவிஞர்களின் ஆக்கங்கள் அடங்கிய 'செம்மாங்கனி' நூலின் மறுபதிப்பு அதிகம் பக்கங்களுடனும், இன்னும் பிறநாட்டுத் தமிழ்ப் பாவலர்களின் கவிதைகளுடனும் விரைவில் வெளிவர இருக்கிறதாம். இலங்கையின் அனைத்துக்கவிஞர்களும் 24 வரிகளுக்கு உட்பட்டதான மரபுக் கவிதைகளைப் படைத்து சுருக்கமான வாழ்க்கைக்குறிப்புடன் இங்குள்ள தொடர்பாளர் கலாகுமரிநாதனுக்கு அனுப்பும்படியும் அரசியல சம்பந்தமான புரசிக் கருத்துக்கள் தவிர்த்து, சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களை உள்ளடக்கி எழுதப்படும் கவிதைகள் தரமான ஆய்வுக்குழுவின் பரிசீலனைக்குப்பின் . நூலில் சேர்க்கப்படும் என்றும் இது பற்றி இச்செய்தி அறியாத கவிஞர்களுக்கும் தெரியப்படுத்தி சிறந்த கவிதைகளை ஈழப்பகுதியில் இடம்பெறச் செய்ய உதவும்படியும் இந்நூல் தொகுப்பாளர். தமிழகக் கவிஞர்அழகாபுரி அழகுதாசன் எழுதுகிறார்.

தேர்ந்தெடுக்கப்படாத கவிதைகள் திருப்பி அனுப்ப இயலாது என்றும் ஒரு கவிஞர் ஒன்றுக்கு மேற்பட்ட கவிதைகளை அனுப்பினாலும் தரமான ஒரு கவிதையே சேர்க்கப்படும் என்றும் கவிஞரின் முகவரி தமிழிலேயே குறிப்பிடப்பட வேண்டும். ஏற்கனவே கவிதை அனுப்பிய பாவலர்களும் தங்களது மற்றொரு சிறந்த கவிதையை இத் தொகுப்பிற்கு அனுப்பலாம் என்றும் இச் செம்மாங்கனியின் மறுபதிப்பு உலகின் பல நாடுகளிலுமுள்ள நூலகங்களில் சேர்க்கப்படவிருக்கிறது என்றும் வெளியீட்டுத் தேதி முடிவானதும் இலங்கையில் நூல் வெளியிடப்படும் என்றும் கவிஞர் அழகுதாசன் கூறுகிறார்.

கவிதைகள் அனுப்பவேண்டியமுகவரி: கலா குமரிநாதன், 189, செட்டியார் தெரு, கொழும்பு 11.

## அனுதாபமும் ஆத்மசாந்தியும்

மரணமாகிறவர்களுக்கு அனுதாபம் கூறும்போது அவர் ஆத்மா சாந்தியடையட்டும் என்று பொதுவாகக் கூறுகிறோமல்லவா? இதுபற்றி ஒரு அன்பர் எமக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"மரணத்தைப்பற்றி அனுதாபம் கூறிவிட்டு இறுதியில் அவருடைய ஆத்மா சாந்தியடையட்டும் என்று கூறப்படுகின்றது. இதன் கருத்தென்ன?

சைவனாகில் ஆன்மா ஏன் சாந்தியடைவான்? தான்

[5-ம் பக்கம் பார்க்க]

## றமழான் சிந்தனை

"யுத்தத்தில் வீரன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளக் கேடயத்தை உபயோகிப்பதுபோல் நோன்பென்னும் கேடயம் மனிதனை புறம் பேசுதல், கோள் சொல்லுதல், கோபப் பேச்சுக்களைப் பேசுதல் சிற்றின்பத்தைத் தூண்டி மனிதனைத் தீயவழியில் செலுத்துதல் ஆகியவற்றிலிருந்து தடுத்துக் கொள்கிறது".

ஸஹர் முடிவு 4-27 நோன்பு திறக்கும் நேரம் 6-31

தொகுப்பு:-சுல்பிக்கா-கௌது

யாழ். மாவட்ட

## பாடசாலைகளுக்கு 66 தொலைக்காட்சி பெட்டிகள்!

[யாழ்ப்பாணம்]

கல்வியமைச்சின்விநியோகப் பிரிவினர் 66 தொலைக்காட்சிப் பெட்டிகளை யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் பொருத்தும் பொருட்டு அனுப்பிவைத்துள்ளனர். ஜப்பான் அரசு இலங்கைக் கல்விவளர்ச்சிக்கென நன்கொடையாய் அளித்ததொலைக்காட்சி பெட்டிகளில் ஒரு பிரிவே இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

20 அங்குல கலர் தொலைக் காட்சிப்பெட்டிகளை பொருத்தும் பொறுப்பு தனியார் கம்பெனி ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் யாழ். வருகை தந்த மேற்படி தனியார் கம்பெனியினர் நேற்றுவரை தாம் பத்து தொலைக்காட்சிப் பெட்டிகளை பொருத்திவிட்டதாக தொழில் நுட்பவியளாளர்களான திருவாளர்கள் பீ. சுனில், எஸ். சம்பத் ஆகியோர் தெரிவித்தனர். வெள்ளிக்கிழமையினுள் தாம் 66தொலைக்காட்சிப்பெட்டிகளையும் பொருத்தி விடுவோமென இவர்கள் மேலும் தெரிவித்தனர். (சி)

## 'சங்கானைசந்தை தாக்குதலில் 30 பேர் காயமடைந்தனர்!

### ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்ப நடவடிக்கை!

(சங்கானை)

சங்கானை சந்தைப்பகுதியில் கடந்த வாரத்தில் இரண்டாவது தடவையாக கடந்த வெள்ளிக்கிழமை நடந்த தாக்குதலில் 30 பேர் காயமடைந்தனர். இத்தாக்குதல் சம்பவம் அரை மணித்தியாலமாக நடர்தது.

இராணுவத்தினர் 5 அடி நீளமுள்ள பொல்லுகளுடன் இத்தாக்குதலை மேற்கொண்டார்கள் என்றும் தாக்கப்பப்பட்டவர்களை இராணுவத்தினர் சப்பாத்துக்கலால் உதைத்து தாக்கினுர்கள் என்றும் கூறப்படுகிறது,

தாக்குதலில் இடம் பெற்றவர்களில் சங்கானைச் சந்தைப் பொருட்களை வாங்குவதற்கு வந்த அப்பாவி மக்களும் கடை வியாபாரிகளும் அடங்குவர்.

தாக்குதலின்போது மீன் சந்தையில் வியாபாரஞ் செய்து கொண்டிருந்த மீன் வியாபாரிகள் அருகிலுள்ள வீடுகளில் அடைக்கலம் புகுந்து இராணுவத்தினர் சென்றதும் மீண்டும் வந்து மீன்களை அரைவாசி விலைக்கு விற்று விட்டு ஓட்டம் பிடித்தனர்.

பின்புறமாக கதவுகளுள்ள கடைக்காரர்கள் முற்பக்கமாக கதவுகளைப் பூட்டிவிட்டு பிற்பக்கமாகத் தங்கள் வீடுகளுக்குச்சென்று மீண்டும் மாலை கடைகளைத் திறந்தனர்.

இதுசம்பந்தமாக சங்கானை மக்கள் ஜனாதிபதிக்கு அனுப்ப மகஜர் ஒன்றை தயாரித்து வருகின்றனர். (ச)

## நகைதிருட்டுவழக்கு: சந்தேகநபர் ரிமாண்டில்!

[சாவகச்சேரி]

கச்சாயைச் சேர்ந்த சிதம்பரநாதன் தர்மலிங்கம் என்பவரது வீட்டில் நடந்த திருட்டு சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்ட மஸ்கேலியாவைச் சேர்ந்த சந்தேகநபரான வேலு சுப்பிரமணியம் என்பவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்டநீதிபதி எம்.எச்.காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப் பட்டது.

சம்பவதினம் ரூபா 9570 பெதுமதியான தங்க நகைகள், கைக்கடிகாரம்திருட்டுதொடர்பாக சந்தேகநபர் வேலு சுப்பிரமணியம் கைது செய்யப்பட்டு 22ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். [க]

## 'சிறந்த படம் தண்ணீர் தண்ணீர் சிறந்த நடிகர் கமலஹாசன்

சென்னை ஜூலை 14

இவ் வாண்டின் சிறந்த தமிழ்ப் படமாக பாலச்சந்தரின் ''தண்ணீர் தண்ணீர்'' என்ற திரைப் படம் தெரிவுசெய்யப் பட்டுள்ளது.

சிறந்த தமிழ் – தெலுங்கு நடிகராக திரு. கமலா ஹசன் தெரிவு செய்யப் பட்டுள்ளார் ''ராஜபார்வை''என்ற தமிழ்த் திரைப் படத்தில் இவர் வெளிக் காட்டிய நடிப்புக்கே சிறந்த நடிகர் விருது வழங்கப்படு கின்றது. [கி]

## கல்லுண்டாயில் கொள்ளைகோஷ்டி தாக்குதல் காரில் சென்ற மூவர்காயம்!

[சுழிபுரம்]

கல்லுண்டாயில், பட்டப் பகலில் காரில் வந்த மூவர், கொள்ளைக்கோஷ்டியினல்தாக்கப்பட்டு, யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கல்லுண்டாய் வைரவர் கோவிலுக்கு அருகில். இச்சம்பவம் நடந்ததாக கூறப்படுகிறது.

சுழிபுரத்தைச் சேர்ந்த உ, புலேந்திரன், தா. தம்பையா, அ. சின்னராசா ஆகியோர் காரில் வந்தபோது 10 பேர் கொண்ட கொள்ளைக் கோஷ்டி காரை வழிமறித்து தாக்கியதாம்.

கத்தி, வாள் போன்ற பயங்கர ஆயுதங்களுடன் தாக்கிய அக்கோஷ்டியை, காரில் வந்தவர்கள் எதிர்த்தபோது காயமடைந்ததாக கூறப்படுகிறது.

காயமடைந்த மூவரும், யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (க)

சுதுமலை சிந்மய பாடசாலை

## அகில இலங்கை ரீதியில் போட்டியிடத் தெரிவு

[யாழ்ப்பாணம்]

கல்வித்திணைக்களத்தின் ஆதரவில் யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை 13 வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தையும் 13 வயதுக்குக் கீழ்பட்ட பெண்களுக்கான போட்டியில் மூன்றும் இடத்தையும் சுவீகரித்துக்கொண்டது.

பாணிப்பாய் வட்டார ரீதியில் நடைபெற்ற உடற்பயிற்சிப்போட்டியில் முதற்தடவையாகப் பங்குபற்றிய சிந்மய பாரதி பாடசாலை மேற்படி இரண்டு பிரிவுகளிலும் முதல் இடத்தைப் பெற்றே மாவட்டப்போட்டிக்குத் தெரிவானது.

இப் பாடசாலையின் 13 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவு அகிலஇலங்கை ரீதியில் நடைபெறும் உடற்பயிற்சிப் போட்டியில் பங்குபற்றத் தகுதிபெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## இன்னொரு...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

செய்த கருமத்தின்படி மற்றப் பிறவி எடுக்கும்.

புத்தனுகில் – மேற்படியே.

கிறிஸ்தவனுகில் சுவர்க்கத்திற்கோ நரகத்திற்கோ போகும்.

நாஸ்திகனுகில் – ஆத்மா சாந்தியடையட்டும் என்பர். ஏனெனில் இவ்வுலக வாழ்வே அவர்களுக்கு இனிமையானது. வேறு பதவி இல்லை,''

## தர்மம்..

[4ம் பக்கத் தொடர்ச்சி]

யாமை முதலிய வழிகளில் நின்று போராடவேண்டும்என்பதையும் அதுவே அறப் போராட்டமாக எமதுஇலட்சியத்தைஅடைவதற்குஏற்றவழி என்று தந்தை செல்வாஅவர்கள் மிகத்தெளிவாக விளங்கவைத்தார்கள் அறிஞர்அண்ணு அவர்களும் உரிமைப் போரட்டம் பற்றிச் சிந்திக்கும்போது ஒட்டுமுறையா? வேட்டு முறையா? என்று வினு எழுப்பி ஆராய்ந்து ஓட்டு முறையே சிறந்தது என்று விளங்கவைத்தார்கள். எனவே நாம்மேற்கொள்ளும் போராட்டம் அகிம்சை வழியில் –அன்பு வழியில்–அறவழியில் அமைந்திருப்பதை உணர்தல் வேண்டும். தமிழ்ப்பேசும் மக்களின் ஏகோபித்த விடுதலை இயக்கமாக த. வி. கூ. இயங்கிவருகின்றது. அதன் போராட்டம் அகிம்சை வழியில் நடந்துவருகின்றது. பலாத்காரத்தை அது ஒரு போதும்கையாளவில்லை.பேச்சு வார்த்தை–அமைதி– பொறுத்திருப்பது இவையாவும் அகிம்சை வழிப் போராட்டத்துக்கு ஏற்ற சில அம்சங்கள் ஆகும். இவற்றை வைத்துக் கொண்டு கொள்கை தவறியது–குறிக்கோள் தவறியது என்று கருதுவது தப்புக்கணக்காகவே அமைந்துவிடும்.ஆட்சியாளர் இவ்வழிமுறைகளுக்கு உரிய மதிப்புக் கொடாமல் அலட்சியப்படுத்திச் செய்யும் அட்டூழியங்களினுலேயே வன்முறைச் சம்பவங்கள் கிளப்புகின்றன.உணர்ச்சி வசப்பட்ட இளம் உள்ளங்கள் பொறுமை இழந்துகொள்கின்றன. தம் உயிர்களையேதுச்சமெனக்கருதி செய்யத்தகாத வேலைகளையும் செய்துவிடுகின்றனர்.அகிம்சை வழியில்–அறவழியில்-போராடுபவர்களுக்கு உரிய மதிப்புக் கொடுத்து நடக்காததாற்றுன் இப்படியான வன்செயல்கள் தலைதூக்குகின்றன என்ற உண்மையை ஆட்சியாளர்கள் உணர்ந்து செயலாற்றவேண்டும்.

தமிழர்கள் இந்நாட்டில் புறம்பாக ஒரு பகுதியில் தனிநாடு அமைத்து வாழ்ந்தவர்கள் என்ற உண்மை எவருமே மறுக்கமாட்டார்கள். அப்படியிருந்தவர்கள் தாம் இழந்த நாட்டை மீட்டுக்கொள்வதில் முயற்சிப்பது அவர்களது கடமையும் உரிமையுமாக இருக்கின்றது.எந்த மக்களும் தமது சுதந்தித்தைப் பெறுவதற்கு விரும்புவதை பிழை என்று சொல்லமுடியாது. அது அவர்களது பிறப்புரிமையாகும். இது உண்மை. இது தர்மம். தர்மம் ஒரு நாள் வெல்லும், அதுவரையும் தமிழ் மக்கள் கொள்கையில் வழுவாமல் இலட்சியப்பற்றுடன் வாழ வேண்டும். அகிம்சைவழியில் எமது இலட்சியத்தை அடைவதில் நாம் முழு நம்பிக்கை வைத்துசெயல்படுவதேதமிழ்ப் பேசும் மக்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

தி. பஞ்சாட்சரம்
மண்டைதீவு.

## வாசுதேவா யாழ்.வருகிருர்

(யாழ்ப்பாணம்)

சமசமாஜக்கட்சியின் தலைவர் திரு. வாசுதேவ நணயக்காரவும் பொதுச்செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணுரத்னுவும் அடுத்த மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்கள்.

கட்சியின் வடபிரதேச மகாநாட்டில் கலந்துகொள்வதற்காகவே இவர்கள் வருகிருர்கள்.

மேற்படி மகாநாடு பற்றிய ஆயத்தங்களைச் செய்வதற்கு கொழும்பிலிருந்து கட்சியின் அரசியற்குழு உறுப்பினராகிய திரு. சிறித்துங்க ஜயசூரிய யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

அவர் வடபகுதியில் அண்மையில் நடந்த இராணுவ பொலிஸ் தாக்குதல் பற்றியும் கட்சிக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக கட்சியின் அங்கத்தவர்களுடனும் கலந்துரையாடினுர். (க)

''நெல்லியடி

## மத்திய மகாவித்தியாலயம் சர்வகலாசாலையாகமாறும் நிலை

(கரவெட்டி)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை சர்வகலாசாலையாக மாற்றி அமைக்கும் நோக்கத்துடனேயே நான் செயற்பட்டு வருகின்றேன். இந்த எண்ணம் இன்னும் சில ஆண்டுகளில் நிறைவேற்றி விடும்.''

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தில் பத்தரை லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்டுள்ள இராசலிங்கம் மண்டபத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மகாவித்தியாலய அதிபர் திரு. சே. குணரத்தினம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் உடுப்பிட்டி எம். பி. திரு. இராசலிங்கம் மேலும் பேசுகையில், ''1956–ம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக பல்கலைக்கழகங்களின் அனுமதி தரப்படுத்தலுடன் ஆரம்பித்து இன்று பிரதேசவாரியான தரப்படுத்தலுக்கு வந்தடைந்துள்ளது. இதன் பலனுக 265 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் மாணவன் மட்டுமே மருத்துவத்துறைக்குள் பிரவேசிக்கக்கூடிய நிலை உருவாகியுள்ளது.

சேர் பொன் இராமநாதனுல் உருவாக்கப்பட்ட பரமேஸ்வராக்கல்லூரியில் வசதிகள் இருந்தபடியால்தான் அக்கல்லூரி சர்வகலாசாலையாக மாற்றப்பட்டது. கிழக்கு மாகணத்திலுள்ள வந்தாறுமூலை மகாவித்தியாலயமும் இன்று சர்வகலாசாலையாக தரம் உயர்த்தப்பட்டு கிழக்கிலங்கைப் பகுதி மக்களுக்கு உயர்கல்விக்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதே அடிப்படையிலேயே நெல்லியடி மத்தியமகாவித்தியாலமும் இன்னும் சில ஆண்டுகளில் அந்த உயர்ந்த நிலையை அடையும் என்பது எனது தணியாத எதிர்பார்ப்பு இந்த நோக்கிலேயே இம்மகாவித்தியாலத்தை பூரண வசதிகளைக்கொண்ட மகாவித்தியாலயமாக மாற்றி அமைப்பதில் நான் தீவிர கவனம் செலுத்தி வருகின்றேன். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் சர்வகலாசாலையாக மாற்றப்படும்போது குறிப்பாக வடமராட்சிப்பகுதி மக்களுக்கே அதனுல் பெரும் நன்மை ஏற்படும்.

உலக அற்புதங்களில் ஒன்ருகிய தாஜ்மஹாலைக் காதலின் சின்னமாகக் கட்டி எழுப்பிய சாஜ்ஜஹான் அதே போன்ற சிறந்த வனப்புமிக்க கட்டிடம் உலகின் வேறு எந்தப்பாகத்திலும் எழக்கூடாது என்ற நோக்குடன் அக் கட்டிடத்தைக் கட்டி எழுப்பி அழகூட்டிய கட்டிட சிற்பியின் கைவிரல்களைந் துண்டித்தான் என்று வரலாறு கூறுகிறது. அதே போன்ற விருப்புடன் தான் இங்கு உருவாக்கப்பட்டுள்ள மணிமண்டபமும் வடபகுதியில் இனிமேல் உருவாகாதவாறு இருக்கவேண்டுமென்றே நவீனமுறையில் இம்மணிமண்டபம் ஆக்கப்படுகின்றது''.

உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரி திரு வ.க ஈசுரபாதம் உட்பட பலர் பேசினர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன

## பரு. தொகுதியில் ஒதுக்கிய நிதியில்
# 85 வீத வேலைகள்
## மேற்கொள்ளப்படவில்லை
### எம். பி. துரைரத்தினம் கவலை

(புலோலி)

பருத்தித்துறைத் தொகுதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென இவ்வாண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதியில் எண்பத்தைந்து வீதமான அபிவிருத்தி நடவடிக்கைகள் இதுவரைமேற்கொள்ளப்படவில்லையென்று பருத்தி துறை எம். பி திரு. கே துரைரத்தினம்கவலைதெரிவித்தார்.

நாகர்கோவில் கிராம அபிவிருத்திச்சங்கம் தமது தேவை கருதி நேரிற்சென்று எம். பியிடம் மஜர் ஒன்றைச்சமர்ப்பித்தபோது எம். பி. மேற்கண்டவாறு தெரிவித்ததார்.

பருத்தித்துறைத் தொகுதியில் பன்முகப்படுத்தபட்ட வரவு – செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியின் பதினைந்துவீதமான வேலை இதுவரை பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாகவும், மிகுதிஎண்பத்தைந்து வீதமான வேலைகளே இதுவரை பூர்த்திசெய்யப்படாமல் இருப்பதாகவும் மழை காலம் அண்மித்து வருவதனல் இவ்வாண்டுக்குள் எவ்வாறு இவ் அபிவிருத்தி வேலைகளைப் பூர்த்தியாக்குவதென்றும் கவலையுடன் தெரிவித்த எம். பி. துரைரத்தினம் அரசாங்கத்தின் 'றெட்டேப்' முறையினலேயே இக்குறைபாடுகள் நிகழ்வதாகவும் தெரிவித்தார். (இ)

## மன்னார் மாவட்ட பிரதேச சபைத் தலைவர்கள்

(மன்னார்)

அடம்பன் உதவி அரசாங்க அதிபர்பிரிவின் பிரதேசசபைத் தலைவராக மன்னார் மாவட்ட விவசாயிகள் சங்கத்தலைவர் திரு. எஸ். சௌந்தரநாயகம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

முசலி உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேசசபைத் தலைவராக ஜனுப் அஸீஸ் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்,

மன்னார் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபை தலைவராக எருக்கலம்பிட்டி கிராமோதய சபைத் தலைவர் ஜனுப் எஸ். ஏ. கபூர் ஏகமனதாகத் தெரிவு செய்யபபட்டார்.

நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபைத்தலைவராக சூரியகட்டைக்காட்டைச் சேர்நத திரு. சூரி அதிர்ஷ்ட சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டார்.

நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபை தலைவராகத்தெரிவுசெய்யப்பட்ட திரு. சூரியைஎதிர்த்து முருங்கன் கிராமோதய சபைத்தலைவர் போட்டியிட்டார்,

இருவருக்கும் சமமான வாக்குகள் கிடைத்ததால் இறுதியில் அதிர்ஷ்ட சீட்டிழுபபின் மூலம் தெரிவு இடம்பெற்றது. (இ)

## ஆலயத் திறப்புவிழாவும் வருடாந்த உற்சவமும்

[யாழ்ப்பாணம்]

யாழ்–கார்மேல் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட கார்மேல் மாதா ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நாளு முன் தினம் திங்கட் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது நாளை வெள்ளிக்கிழமை காலை திரு நாட்பலிப் பூசையும் மாலை திருச்சொரூபப் பவனியோடும் உற்சவம் முடிவடையும். [இ]

## சனசமூக நிலையம்

(சாவகச்சேரி)

மிருசுவில் குருக்கள்மாவடிச் சனசமூகநிலைய வருடாந்தக் கூட்டம் திரு வே சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வே. சிவஞானசுந்தரம், உபதலைவர்; கு. தெட்சணமூர்த்தி, காரியதரிசி: த. சிவபிரகாசம், உபகாரியதரிசி: இ. சண்முகம், பொருளாளர்: க. சுவாமிநாதன் 7 பேர் கொண்ட குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. (இ)

# துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி கல்மடு — சம்புக்குளம் வீதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கல்மடுவைச் சேர்ந்த நா. சிவராசா [வயது 38] என்பவரே துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருடன் சென்ற கு செல்வம் என்பவர் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பியுள்ளார்.

இரவு 7–30மணியளவில்காயமடைந்தவரும் திருச்செல்வமும் சம்புக்குளம் வீதி வழியாகச் சென்றுகொண்டிருந்ததாகவும் திடீரென இருவர் வந்து துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி சப் இன்ஸ்பெக்டர் திரு, பிரேமதாசா, சார்ஜன்ட் என். சண்முகநாதன் ஆகியோர் நடத்திய தேடுதலை அடுத்து வீரையா லட்சுமிகாந்தன் [வயது 21] என்பவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டார். ஒருவரைப் பொலிசார் தேடி வருகின்றனர், [இ]

### மந்துவில் சங்கக்கடை
# மனேஜர் கொலை வழக்கு மேல் நீதிமன்றத்திற்குபாரம்

[சாவகச்சேரி]

மந்துவில் சங்கக்கடை மனேஜர் கொலை வழக்கு விசாரணை யாழ். மேல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

1980ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ம் திகதி மந்துவில் சங்கக்கடை மனேஜர் வன்னியதலசிங்கம் என்பவரை அவ்வூரைச் சேர்ந்த பாலசிங்கம் இரத்தினசிங்கம் ஆகியோர் பொல்லால் அடித்தும் வாளால் வெட்டியும் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

கடந்த இரண்டரை வருடங்களாக தனித்தனி, இரு நீதிபதிகளால் இவ் வழக்கு விசாரிக்கப்பட்டு முடிவுற்றிருந்தது.

எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளில் ஒருவரான திரு செ. அம்பிகைபாலன் தொகுப்புரை நிகழ்த்தியபின் நீதிபதி ஜனுப் எம். எச். காரியப்பர் இந்த் விசாரணையை மேல் நீதி மன்றத்திற்குப் பாரப்படுத்துவதாகக் கூறி எதிரிகளை அதே பிணையிற்செல்ல அனுமதித்தார். (இ)

## "லெபனன் சம்பவங்கள்; உலகசமாதானத்திற்கு ஒரு அச்சுறுத்தலாகும்"

(யாழ்ப்பாணம்)

'பாலஸ்தீன மக்களின் மறுக்கப்படமுடியாத உரிமைகள் மறுக்கப்பட்டுவருவதை சமீபகாலங்களில் லெபனன் நாட்டில் நடைபெறும் சம்பவங்கள் உணர்த்துகின்றன. லெபனன் நாட்டில் நடைபெறும் சம்பவங்களாக இவற்றைக்கொள்ளலாகாது. உலக சமாதானத்திற்கே ஒரு அச்சுறுத்தலாகும். இன்று நடுத்தெருவில் நிற்கும் பாலஸ்தீன சகோதரர்களுக்கு நாம் எமது பூரண ஆதரவையும், ஒருமைப்பாட்டையும் தெரிவிப்போம். அவர்களுடைய சுயநிர்ணய உரிமைக்காகவும் சுதந்திர அரசை உருவாக்கும் போராட்டத்திற்காகவும் எமது ஆதரவைப் தெரிவிப்போம்,'

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் (மாஸ்கோ) வாலிபர் சங்க யாழ். மாவட்ட பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய யாழ். மாவட்ட உதவிச் செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் உரையாற்றுகையில்குறிப்பிட்டார்.

திரு. சே. சுகுமாரின் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:–

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பூரண ஆதரவுடனும் மற்றைய ஏகாதிபத்திய நாடுகளின் ஆசியுடனும் இஸ்ரேல் லெபனன் மீது படையெடுத்திருக்கின்றது. அமெரிக்கா இஸ்ரேலின் இன வெறிக்கு ஆக்கமும் ஊக்கமும்கொடுத்து வருகின்றது தாராளமாக ஆயுத உதவிகளும் செய்து வருகின்றது.

'பாலஸ்தீனியர்களை ஒழித்கட்டவேண்டும். அவர்களுக்கென்று தனியாக ஒரு நாடோ அரசோ அமையக்கூடாது என்ற நோக்குடன் இஸ்ரேல் செயல்பட்டுவருகின்றது. ஜூன் மாதம் 4–ம் திகதி எதுவித முன்னறிவித்தலுமின்றித் திடீரென பாலஸ்தீனியர்கள் வாழும் குடியிருப்புக்கள் மீது இஸ்ரேல் ஜெட் விமானங்கள் குண்டுமாரி பொழிந்தன. இது புதிய தாக்குதல் அல்ல சில மாதங்கட்குமுன்பு கோலான்குன்றுகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. லெபனன் எல்லையில் வாழும் பாலஸ்தீன மக்களால் இஸ்ரேலின் பந்தோபஸ்திற்கு ஆபத்து நேருமென பிரதமர் பெகின் கூறிவருகின்றார்.

ஐக்கிய நாட்டு பாதுகாப்புச் சபை உடனடியாக இஸ்ரேலை யுத்தத்தை நிறுத்தும்படியும் எவ்வித நிபந்தனையுமின்றி படைகளை வாபஸ் பெறும்படி கோரியும்கூட இஸ்ரேல் இவ்வேண்டுகோளுக்கு செவி மடுக்கவே இல்லை.' (சி)

## அப்புத்தளை எம். பி. க்கு பாராட்டு

(சுழிபுரம்)

ஆசிரியர்களின் மதிப்பையும், சமூக அந்தஸ்தையும் உயர்த்த நடவடிக்கை எடுக்கும்படி பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்த அப்புத்தளை எம். பி. திரு. லொக்கு பண்டாவுக்கு சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி ஆசிரியர் கழகத்தினர் தந்தி மூலம் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துள்ளனர். (இ)




## சாரணரின் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக்கல்லூரி சாரணர்கள் மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் சிரமதானப் பணியை மேற்கொண்டுள்ளார்கள்.

இச்சிரமதானப்பணி கடந்த வார இறுதியில் ஆரம்பிக்கப் பட்டது. எதிர்வரும் சனியும் ஞாயிறும் தொடர்ந்து நடைபெறும்.

## வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர்

[சுழிபுரம்]

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு தலைவராக அராலி கிராமோதய சபைத் தலைவர் திரு. என். கந்தையா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உதவி அரசாங்க அதிபர் திரு ஸ். செந்தில்வேல் தலைமையில் இத்தெரிவு நடைபெற்றது. (இ)

## விளையாட்டு விழா

[யாழ்ப்பாணம்]

வதிரி வடக்கு மெ. மி. த. க பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நாளை தேவரையாளி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் பருத்தித்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு ப. சச்சிதானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.


ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் - விஜயா
நல்லநேரம்
[புதிய பிரதி]

2-வது வாரம்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்-ஸ்ரீதேவி
குரு (கலர்)

சில தினங்கள் மட்டும்
றீகல் [யாழ்நகர்] தினசரி; 10-30, 2-30, 6-15, 9-30
4-வது ஜனத்திரள் வாரம்
சிவாஜி, கீதா குமாரசிங்கா, ஜெயபாரதி
மோகனப் புன்னகை
(கலர்)

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
இன்று மட்டும்
✶ ரஜனிகாந் ✶ சுஜாதா ✶ விஜயன்
✶ கராத்தே மணி ✶ ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
8-வது பரபரப்பூட்டும் வாரம்!
கமல் (இரட்டைவேடம்) சுஜாதா, அம்பிகா,
கடல் மீன்கள்
—கலர்—

ராணி (யாழ் நகர்) 2-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30 9
75வது வெற்றித் திருநாளை நோக்கி
கார்த்திக்-ராதா-தியாகராஜன்
அலைகள் ஓய்வதில்லை (கலர்)


வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
REVENGE OF THE PINK PANTHER

லிடோ (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்
ராஜபார்வை

Windsor (Jaffna) Last Few Days
Daily 10-30, 2-00, 4-30, 7-00 and 9-30 P. M.
BRUCE LEE in
THE GAME OF DEATH
(Color)
உலக சாம்பியன் புருஸ்லியின் பயங்கரமான கராட்டி சண்டைகள் நிறைந்த படம்

ஸ்ரீதர் (யாழ்.நகர்)
10-30, 2-30, 6-30, 9-30
15, 16-7-82
தேங்காய் சீனிவாசன் - மனோரமா
உங்கவீட்டு கல்யாணம்


## நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர்



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவராக திரு சி. வர். சங்கரப்பிள்ளை தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

இவர் நெடுந்தீவுமேற்கு கிராமோதயசபைத் தலைவர், நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவு சங்ககிளை இல - 2 தலைவர், நெறியாளர், நெடுந்தீவு கல்விப் பணிக் கழகத் தலைவர், நெடுந்தீவு மகா வித்தியாலய அபிவிருத்திச் சபை உப தலைவர். நெடுந்தீவு பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்க உப செயலாளர், நெடுந்தீவுமேற்கு கரமந்தை கந்தசாமி ஆலய பரிபாலன சபை உப செயலாளர், நெடுந்தீவு இந்து கலாச்சார மன்ற உறுப்பினர், பிரயாணிகள் சங்க செயற்குழு உறுப்பினர், நெடுந்தீவு மேற்கு கமத்தொழில் தொடர்புக்கமக்காரர், நெடுந்தீவு பொலிஸ் பொதுஜன தொடர்பு உறுப்பினர், நெடுந்தீவு சுகாதார சேவைகள் தொண்டர், நெடுந்தீவு மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முன்னைய நாட்களின் செயலளர், நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலை அபிவிருத்திச்சபை, நெடுந்தீவு மகாவித்தியாலய பழைய மாணவர்சங்கம், நெடுந்தீவுமேற்குசனசமூக நிலையங்களின் செயலாளருமாவார்.

## வெள்ளி விழா

[பண்டத்தரிப்பு]

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவைகூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்தி சங்கத்தின் வெள்ளி விழா இம்மாதம் 18 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் திரு ச. சிவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதிகளாக எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம், வட பிரதேச கூட்டுறவு ஆணையாளர் திரு எஸ். ஜெயகாந்தன், யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு எஸ். ஞானப்பிரகாசம் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

விழாமலரை எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் வெளியிட்டு வைப்பார்.

இவ் விழாவில் கோப்பாய்த் தொகுதி எம்.பியும், தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவருமான திரு மு. ஆலாலசுந்தரம் யாழ் சுகாதார சேவை அத்தியட்சகர் டாக்டர் க.மாணிக்கம், யாழ் அரசினர் வைத்திய சாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சு. நச்சினார்க்கினியன் உட்பட மற்றும் பலர் உரையாற்றுவார்கள்.

இவ் விழாவையொட்டி அன்று காலையில் ஆண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி, பெண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி, யாழ்அரசினர் ஊழியர்களுக்கும் யாழ் சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலக ஊழியர்களுக்கும் இடையில் நடைபெறும் கயிறு இழுவைப் போட்டி ஆகியன நடைபெறவுள்ளன. இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. [க]

## சேபால மீது இனி எனக்கு...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

போலவே உணர்ச்சியும் அறிவும் உள்ளவனுக இருக்கிருன். அவனுக்கு இப்போது ஒரு பிரம்படித்தழும்பு ஏற்பட்டு விட்டது ஏனென்ருல் இனிமேல் அவன் விமானக்கடத்தல்காரரின் மகன் என்றுதான் அழைக்கப்படுவான் தனது மகனுக்கு தகப்பன் செய்து விட்ட பாதிப்புக்களை அவர் உணர்வாரா என்று எனக்குத் தெரியவில்லை. அவனை இதையெல்லாம் மறக்கச்செய்து எதிர்கலத்தை மகிழ்ச்சிகரமாக்கி இந்தப்பாதிப்புக்களில் இருந்து அவனை விடுவிப்பது எனது கடமையாகிறது. அது கஷ்டமாயிருந்தாலு மென்னுல் முடிந்ததைச் செய்வேன்.

''தாய்லாந்தில் வந்து இறங்கியது முதலே நானும் ஒரு பணயக்கைதிபோலவே உணர்ந்தேன். எனது வாழ்க்கையில் என்னைப் பாதித்தமிகப்பெரிய உளரீதியான அதிர்ச்சியாகும் இது. எனக்கு ஒரு தார்மீகக் கடமையிருந்தது. அதனுல் தான் நான் பாங்கொக் வர முடிவு செய்தேன். அப்பாவிகளான விமானப்பயணிகளின் உயிரைக் காப்பாற்றுவது எனது கடமையென்று நான் கருதினேன். நான் எனது மகனுடன் அங்குவரவேண்டுமென்பதும் சேப்பாலாவின் நிபந்தனைகளில் ஒன்ருக இருந்தது. அவருடன் தங்கியிருக்க நான் விரும்பவில்லை. அவரும் அப்படி கேட்கவில்லை. இங்கோ அல்லது இத்தாலியிலோ வாழ்வது பற்றி நாங்கள் ஒப்பந்தம் செய்துகொள்ளவுமில்லை.

வெடிகுண்டுகளை அவர்வைத்திருந்தால் நிச்சயம் அவருக்கு உதவியாளர்களும் இருந்திருப்பார்கள் என்றே நான் கருதுகிறேன்.

அவரை நான் சிறையில் சந்தித்தபோது தாம் செய்தது சரியென்றும் அதற்காகத்தாம் கவலைப் படவில்லையென்றும் அடித்துக்கூறினுர். என்னைப் பொறுத்தவரை விமானக் கடத்தல் குறித்து நான் மிகவும் குழப்பமடைந்துள்ளேன். தனிப்பட்ட முறையிலோ அதிகாரிகள் சம்பந்தப்பட்ட வகையிலோ பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு இது வழியல்ல.

போதைப்பொருள் கடத்தல் சம்பந்தமாக யூகோஸ்லாவியாவில் கைசெய்யப்பட்டதால் சேப்பாலாவின்வாசகால விசாவை இத்தாலிய அதிகாரிகள் ரத்துச்செய்து விட்டார்கள். அதனுல் கடந்த பெப்ரவரியில் அவர் இத்தாலியை விட்டு வெளியேறினுர். போதைப்பொருள் கடத்தலில் அவர் ஈடுபட்டதே எங்கள் திருமணம் தோல்வியுற்றதற்கு முக்கிய காரணம் அவர் புறப்பட்டுச் செல்லும்போது எனது அனுமதியில்லாமலே குழந்தையையும் எடுத்து சென்றுவிட்டார். அது குழந்தைக்கடத்தலாகும் இத்தாலிக்குத்திரும்பி வருவதற்குக் குழந்தையை அவர் பயன்படுத்த முயன்ருர். நீதிமன்றம் மூலம் எனது பாஸ்போர்ட்டில் குழந்தையின் பெயரைப் பொறிக்கச்செய்து எனது சகோதரனுடன்சென்று குழந்தையைத் திருப்பிக் கொண்டுசென்றேன். சேப்பால இதற்கு உடன்பட்டார். ஆனுல் தாமும் இத்தாலிக்கு வர அனுமதிக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தினுர். ஆனுல் அது சாத்தியமாகவில்லை.

இங்கு பொலிசார் என்னை நன்ருகவே நடத்தினுர்கள். அன்பாகவும் புரிந்துணர்வுடனும் நடந்து கொண்டார்கள். எனது பாஸ்போர்ட்டைத் திருப்பிக்கொடுத்து நாட்டை விட்டுச்செல்லவும் என்ருர்கள்''. [பெ]

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பயிற்சி

[அரியாலை]

ஸ்ரீலங்கா மத்தியஸ்தர் சங்க அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தில் உள்ள உதைபந்தாட்டத் தீர்ப்பாளர்களுக்கான மூன்று நாள் பயிற்சி வகுப்பு யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 22-ம், 23-ம், 24-ந் திகதிகளில் நடைபெறவிருக்கிறது.

இந்தப் பயிற்சி வகுப்பை மேற்கு ஜேர்மன் உதைபந்தாட்ட சர்வதேச தீர்ப்பாளர்களில் ஒருவரும் மதிப்பீட்டாளருமான திரு. கஸ்தோப் முல்லர் நடாத்துவார்.

யாழ். மாவட்ட உதைபந்தாட்டத்தீர்ப்பாளர் தீர்ப்பாளர் சங்கத்தின்ஆதரவில் நடைபெறும் இவ்வகுப்பில் முப்பது தீர்ப்பாளர்கள் தெரிவு செய்யப்படுவர் தெரிவாகும் தீர்ப்பாளர்களுக்கு ஆங்கில மொழி அவசியமெனக் கருதப்படுகிறது.

தங்குமிட வசதியுடன் நடைபெறவிருக்கும் இப்பயிற்சி வகுப்புக்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்டத் தீர்ப்பாளர் சங்கச் செயலாளர் காப்டன் என். சோமசுந்தரம் செய்து வருகிருர், (அ)

## இன்றைய பலன்

ஆனி மாதம் 31-ம் திகதி

வியாழக்கிழமை

(15—7—82)

மேடம்: அதிகாரப் போதையில் தவறுகள் நடக்கும். சகாக்களின் விரோதத்தைச் சம்பாதிக்க நேரிடும். விவசாயத்துறை மூலம் நஷ்டம் ஏற்படலாம்.

இடபம்: குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சம்பவங்களுக்கு இடமுண்டு, சிலர் வாழ்க்கையில் தனச் சிறப்பும் இடம் பெறலாம். வியாபாரிகள் முதலீடுகளில் பணத்தை செலுத்த விரும்புவீர்.

மிதுனம்: பிரிவின் தாக்குதல் வேதனையைத் தரும். தொழில் துறையிலும் பின்தங்க நேரிடும். சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடமுண்டு. மனத்திடம் வேண்டும்.

கடகம்; இலாபகரமான தொழிலில் முதலீடு செய்வீர்கள். தாய் வழியால் தனவரவுக்கு இடமுண்டு. குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலைதென்படும். நல்லநாள்.

சிங்கம்; உள்ளத்தில்உவகை துள்ளும். நண்பர்கள் உங்களை உற்சாகமாகவரவேற்பார்கள். தேன் சிந்தும் நிகழ்ச்சிகள் நடைபெறும். வெற்றித் தினம்.

கன்னி: ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும். உணர்ச்சியைத் தூண்டும் எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும். வேண்டாத நடவடிக்கை மூலம் நண்பர்களைப் பகைத்துக் கொள்வீர்.

துலாம்; பசுமையான சம்பவம் நடைபெறும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை தென்படும். காதல் வானில் சஞ்சரிப்பவர்களுக்குகனிவான நிகழ்ச்சி உண்டு.

விருச்சிகம்:ஏக்கத்தின்சாயல் தாக்கும். எதிர்பாராத விதமாக சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரிடும். உள்ளக் கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும்.

தனு: புண்ணிய விருப்புக்களில் ஆர்வம் பிறக்கும். பெரியோர்களின் உதவிக்கு இடம் உண்டு. கொண்ட கொள்கையில் அதிக உறுதிப்பாடு தென்படும்.

மகரம்: எதிலும் முன்னணியில் நிற்பீர்கள். பிறரின் கவனம் உங்கள் மீது செலுத்தப்படும். சொந்தமாக தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும். பதவி உயர்வு கிடைக்கும்.

கும்பம்: வரவில் உயர்வு தென்படும். பெரியவர்களின் வாழ்த்தும் கிடைக்கும். எழுத்

(8-ம் பக்கம் பார்க்க)

### வடபகுதி தாக்குதல் சம்பவங்கள்:

# யாழ். மா. அ. ச. தலைவருக்கும், அரசாங்க அதிபருக்கும் புகார்

(கரவெட்டி)
கரவெட்டி உ. அ. அதிபர் பிரிவு பிரதேச சபைத் தலைவர் திரு. என். பாஸ்கரன், நெல்லியடி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பின்னர் இப்பகுதியில் நடைபெற்றுவரும் அசம்பாவிதங்கள் குறித்து யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவரிடமும், யாழ். அரசாங்க அதிபரிடமும் முறையிட்டுள்ளார்.

அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

பாதுகாப்புப் படைகள் நெல்லியடிப் பகுதியில் நடந்து கொள்ளும் முறைகளைப் பார்க்கும்டத்து பொலிஸ் பொது மக்கள் நல்லுறவு அபிவிருத்தி அடையுமா? என்பதும், பொது மக்களின் ஒத்துழைப்பை பாதுகாப்புப்படைகள் எதிர்பார்க்கலாமா? என்பதும் கேள்விக் குறியாக இருக்கிறது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்த தினம் பொது மக்கள் பொலிசாருக்கு உதவியாக காயப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை ஆஸ்பத்திரியில் சேர்ப்பது விடயமாக ஒத்துழைத்தார்கள். சில நிமிட நேரம் தாமதித்து இருந்தால் அவர்களின் உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய நிலை இருந்தது.

மேலும் சம்பவத்திற்கு மறுதினம் இறந்த பொலிசாருக்கு மாரியாதை செலுத்தும் முகமாக நெல்லியடிப் பகுதிக் கடைகள், தியேட்டர்கள் மூடப்பட்டு இருந்தன. அது மட்டுமன்றி அன்றைய தினம் நெல்லியடிச் சந்தியில் கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினருக்கு நெல்லியடி வர்த்தகர் சங்கம் நேரத்துக்குநேரம் வேண்டிய உணவு வகைகளை வழங்கினர்.

இத்தனைக்குப் பின்வரும் கடந்த 4ம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் பொலிஸ் உத்தியோகத்தர் அருந்தவராசாவின் மரணச் சடங்குகளில் கலந்துகொண்டு திரும்பிய பொலிசார் நெல்லியடிச் சந்தியில் வந்து தங்கள் ஜீப் வண்டியை நிறுத்தி அதைத் தள்ளி விடுமாறு கேட்டுக்கொண்டபோதும் பொதுமக்கள் அதற்கிணங்கி வண்டியைத் தள்ளினார்கள். ஆத்திரமூட்டக்கூடிய எதுவிதமான அசம்பாவிதமும் இல்லாத போதும் பொலிசார் ஜீப் வண்டியைத் தள்ளியவர்களையும் மற்றும் அப்பாதையால் போய் வந்துகொண்டிருந்தவர்களையும் அடித்துத் துன்புறுத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து பஸ் வண்டிகளை நிறுத்துவதும் பிரயாணிகளை இறக்கி குறிப்பாக மாணவிகளைத் தெருவில் முழந்தாளிட்டு நீண்டநேரம் இருக்குமாறு பணிப்பதும், அவர்களை மிரட்டுவதும் அடிப்பதும் கடைக் கண்ணாடிகளையும், பொருட்களையும் சேதப்படுத்துவதும் ஆங்காங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இம் முறைப்பாட்டைக் கேட்ட யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. அ. நடராஜாவும், யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவும் தாம் உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொள்ள இருப்பதாகவும், பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக தங்களில் ஒருவரேனுடனும் தொடர்புகொள்ள வேண்டும் என்றும் கேட்டுள்ளார்கள்.

அவசியம் ஏற்படின் தாம் நேரடியாக ஜனாதிபதியுடன் தொடர்புகொள்ளத் தயங்கப்போவதில்லை என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (க)

## நியமனங்களை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோக நியமனங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின்போது பல்கலைக்கழக அலுவலர் தவறான முறையில் நடந்தது குறித்துவிசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்'' என்னும் பிரேரணையை திரு மு. ஆலாலசுந்தரம் கொண்டுவந்தார்.

இப் பிரேரணைமீது அவர் தொடர்ந்துபேசுகையில் வருங்காலத்தில் உத்தியோகத் தேர்வு முறைகள் நேர்மையான முறைகளில் நடைபெற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திரு சின்னத்துரை இப் பிரேரணையை ஆதரித்துப் பேசினர்.

பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதும் தலைவர் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார். (மா)

## துப்பாக்கிச்

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

உதவிப் பொலிஸ் அதிபர் திரு. எஸ். நவரத்தினராசா, பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஸ்ரீதரன் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர். (மா)

## இன்றைய பலன்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தாளர்களுக்கு புகழ் குவியும் புதினத்திற்கு இடமுண்டு கலைஞர்களுக்கு இன்று சிறப்பான நாள்.

மீனம்; சிந்தனை சிலந்திவலை பின்னும். கடந்தகாலச் சம்பவமொன்று வேதனையைத் தரக்கூடும்கடமையில் தளர்ச்சி காணப்படும். தொழில் விடயத்தில் கவனம் செலுத்தவும்.

**சோதிடக்கலாநிதி**
**திருமலை**
**க. வேலுப்பிள்ளை**

## கிராமோதய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படும்.

''உள்ளூரிலும் வெளிநாடுகளிலுமிருந்து நிதிநிரட்டவு, உதவிகள், நன்கொடைகள் பெறவும் இதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

'இந்நிதியத்துக்கு ஆரம்ப வைப்புப்பணமாக 10 லட்சம் ரூபாவை அரசாங்கம் வழங்கியுள்ளது. இலங்கை வங்கியில் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவின் கணக்கிலிருக்கும் 50 ஆயிரம் ரூபாவும் இந்நிதியத்துக்கு வழங்கப்படும். [ம-இ]

## வர்த்தக ஊழியர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் தீவிரமாக ஈடுபட்டனர்.

### யாழ்ப்பாணத்தில்

இலங்கை வர்த்தக ஊழியர் சங்க யாழ் கிளையைச் சேர்ந்த யாழ் ஐக்கிய வியாபாரச்சங்க ஊழியர்கள் சங்கச்செயலாளர் எஸ். யோகேஸ்வரன் தலைமையில் ஒரு மணித்தியாலம் அடையாள பொதுவேலை நிறுத்தம் செய்தனர், இவர்களுடன் பரந்தன் தொழிற்சாலை ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

யாழ் பஸ் நிலையத்துக்கு முன்னிலையிலும் சுமார் 100 பேர் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் ஆதரவு தெரிவித்தனர்.

'பரந்தன் போராட்ட ஊழியர்களுக்கு மீண்டு வேலை கொடு' 'வேலை தடை செய்யப்பட்டதுறைமுக ஊழியரை மீண்டும் வேலைக்கெடு' என்ற சுலோக அட்டைகளை அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் வைத்திருந்தனர். [ம-இ]

## யாழ். நகரை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும் கருவியால் தீவிரசோதனையிட்டபின்னர் 'பார்சலை' குருநகர் முகாமுக்கு எடுத்துச் சென்றனர்.

முகாமில் மேலும் சோதனை நடந்த போதுதான் அது வெடிகுண்டு பார்சல் இல்லை என்றும், பார்சலுக்குள் இருந்தது வெறும் இளநீர் கோம்பைகள் என்பதும் தெரிய வந்தது!

குறிப்பிட்ட உபதபால் நிலையத்துக்கு அருகில் உள்ள ஒழுங்கையில்தான் கடந்த ஜூன் மாதம் 8ம் திகதி யாழ் நாவலர் வீதியைச் சேர்ந்த தனபாலசிங்கம் கணேசபவான் [13வயது] எனும் மாணவன் குண்டு வெடிப்பு சம்பவத்தில் பலியானர் என்பது தெரிந்ததே.

## இப்படியும் நடக்கிறது

பல லட்சம் பிரதிகள் விற்பனையாகும் ஒரு இந்திய வார இதழில், சில மாதங்களுக்குமுன்னர் அதன் வாசகர் ஒருவர்—

''எமக்குப் பிறந்திருக்கும் முதல்-மூத்த பெண் குழந்தைக்கு ஒரு பெயர் சூட்டுங்கள்'' என்று கேட்டிருந்த போது, 'ரூபவாஹினி' என்று பெயர் வையுங்கள்' என்று பதிலளிக்கப்பட்டது!

சின்ன வயதில் பெரும் சாதனை என்பார்கள். அதுபோல் இரவு பதினொன்று இருபதுமுதல் நள்ளிரவு ஒரு மணி இருபது நிமிடம்வரை ஸ்பெயின் தலைநகரான மட்றிட்டில் நடைபெற்ற உலகக்கிண்ண உதைபந்தாட்ட இறுதி ஆட்டப்போட்டிக்கு 'ரூபவாஹினி' எம்மை உயிர்த்துடிப்புடன் அழைத்துச்சென்றது... நம்பமுடியாதது!

\+ + +

அடிக்கடி கீறல் இசைத்தட்டுக்களை காலையில் ஒலிபரப்பும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை, காலையில் தவழும் 'பொங்கும் பூம்புன'லில்—

'உப்பில்லாத சோறு நான்... ஊறுகாய் நீ எனக்கு...' எனும் ஈழத்துப் பாடலை மட்டும் அடிக்கடி கீறல் இல்லாமல் ஒலிபரப்பிவருகிறது. ஏன்?

உப்பிட்டாரை உள்ளளவும் நினை என்பதா? செஞ்சோற்றுக்கடன் தீர்க்க... என்பதற்கா?

'ஊடுருவி'

# ரூ. 80,000 நகைகள் பட்டப்பகலில் கொள்ளை!

[கோண்டாவில்]
கோண்டாவில் கிழக்கில். பட்டப்பகலில் வீட்டுக்காரர் பக்கத்திலுள்ள தோட்டத்திற்கு சென்ற சமயத்தில் சுமார் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான 40 தங்கப்பவுண் நகைகள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன.

கோண்டாவில் கிழக்கில் ஞானவைரவர் கோவிலடியை சேர்ந்த கனகலிங்கம் என்பவர் இச்சம்பவம் பற்றி சுன்னாகம் பொலிசில் புகார் செய்துள்ளார்.

தாலிக்கொடி, சங்கிலி, காப்பு கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நகைகள் பாதுகாப்பு கருதி வீட்டில் வெவ்வேறு இடங்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் சம்பவ தினம் காலை, எல்லா நகைகளையும் எடுத்து பெட்டகத்திற்குள் வைத்துப்பூட்டி விட்டு, தோட்டத்திற்கு சென்றார்கள் என்றும் கூறப்படுகிறது.

தோட்டத்திலிருந்து வந்து பார்த்தபோது நகைகள் கொள்ளையடிக்கப்பட்டது தெரியவந்ததாம். சுன்னாகம் பொலிஸார் விசாணை செய்து வருகின்றனர்.

## இன்று

[யாழ்ப்பாணம்]
அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் அச்சுவேலி கிராமோதயசபையினர் இன்று கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம் தலைமையில் சிரமதானம் மேற்கொள்வார்கள்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


# ஹோம் பிஹன்ஸ் லிமிட்டெட்

## புதிய உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 8-00 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பிஹன்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 370—438—537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி.
தொலை பேசி இல; 273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பிஹன்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல. 105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) ஸ்ரீமணிமலர் ஸ்டோர்ஸ்
இல: 157/2, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு—11
தொலைபேசி இல: 23277

(5) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல; 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஜூலை மீ 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Tleegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.